பக்கங்கள் : பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2038 மார்கழி 20 சனிக்கிழமை (05.01.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 40

# இந்தியப் பிரதமரின் வருகை ரத்து போர்நிறுத்தம் முறிந்துவிட்டதால்

## கொழும்புக்கு விரைவில் தகவல் தெரிவிக்கப்படும்

சென்னை ,ஜனவரி.05

இலங்கையின் அறுபதாவது சுதந்திரதினக் கொண்டாட்டத்தில் பிரதம விருந்தினராக இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் கலந்து கொள்வது பெரும்பாலும் அசாத்தியமானது என நம்பகரமாக அறிய வருகின்றது.

இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான போர் நிறுத்த ஒப்பந்தம் செயலிழந்து முழு யுத்தம் வெடிக்கும் சூழல் ஏற்பட்டுள்ள பின்னணியில், இந்தியப் பிரதமர் கொழும்பு செல்வது சாத்தியமற்றது என்ற தகவல் புதுடில்லியிலிருந்து சென்னைக்குத் தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும், இந்த முடிவு மிக விரைவில் கொழும்புக்குத் தெரியப்படுத்தப்படும் என அறிய வந்திருப்பதாகவும் சென்னைச் செய்திகள் தெரிவித்தன.

எதிர்வரும் பெப்ரவரி 4 ஆம் திகதி இடம் பெறும் இலங்கையின் அறுபதாவது சுதந்திர தினக் கொண்டாட்டங்களில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார் என இலங்கை அரசு அறிவித்திருந்தது.

விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் பெரும் யுத்த முஸ்தீபை இலங்கை அரசு மேற்கொண்ண

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பயணிகள் கப்பல் சேவை திங்கள் முதல்இடைநிறுத்தம்

யாழ்பாணம்,ஜன்.5

கங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையிலான பயணிகள் கப்பல்சேவை நாளை மறுதினம் திங்கட்கிழமையிலிருந்து தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இத்தகவலை யாழ்.அரச அதிபர் கே. கணேஸ் அறிவித்துள்ளார்.

பயணிகள் கப்பல்சேவை இடைநிறுத்தப்பட்டதாகவும் மீண்டும் ஆரம்பமாகும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையின் இனப்பிரச்சினைக்கு இராணுவ நடவடிக்கை தீர்வாகாது

### இந்திய வெளிவிவகார அமைச்சு அறிக்கை

புதுடில்லி, ஜன. 05

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு இராணுவ நடவடிக்கை மூலம் தீர்வுகாணமுடியாது என்று உறுதியாக நம்புவதாக இந்தியா அறிவித்திருக்கிறது.

இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் செய்துகொண்டபோர்நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தம் முடிவுக்கு வந்துவிட்டதாக இலங்கை அரசு அறிவித்திருக்கும் நிலையில் இந்தியா முதல் முறையாக தனது கருத்தினை வெளியிட்டிருக்கின்றது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் மீதான தடை இப்போது இல்லை சமாதான முயற்சிகளிலிருந்து அரசு விலகாது

கொழும்பு ஜன 5

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை இப்போதைக்குத் தடை செய்யும் நோக்கம் அரசாங்கத்துக்கு இல்லை.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சமாதான முன்னெடுப்புக்களிலிருந்து விலகிச்செல்லவில்லை.

வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம இவற்றை நேற்றுத் தெரிவித்தார்.

"போர் நிறுதத ஒப்பந்தத்தை ரத்துச் செய்து விட்டு,சர்வகட்சி மாநாட்டின் மூலம் அரசியல் தீர்வு ஒன்று ஏற்படுத்தப்படும் என்று

(12.ஆம் பக்கம் பார்க்க)

## முகமாலை மோதலில் புலிகள் 8 பேர் பலி

படைத்தரப்பு அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.5

கிளாலி மற்றும் முகமாலைப்பகுதிகளில் கடந்த புதன்கிழமை இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடயைில் நடைபெற்ற மோதல்களில் விடுதலைப்புலிகள் அமைப்பைச் சேர்ந்த எட்டுப் பேர் கொல்லப்பட்டனர். இராணுவத் தரப்பில் மூன்று பேர் பலியாகினர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி மோதல் குறித்து பலாலி படைத்தலைமையகம் நேற்றிரவு விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கிளாலி மற்றும் முகமாலைப்பகுதிகளில் இருந்து இராணுவத்தினர் முன்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## போர் நிறுத்தம் முடிவு; கண்காணிப்புக் குழு வெளியேறும் ஆனால் நோர்வேயின் அனுசரணைப் பணி தொடரும்!

கொழும்பு, ஜன.05

போர் நிறுத்த உடன்படிக்கையும், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் செயற்பாடுகளும் எதிர்வரும் 16ஆம் திகதியுடன் முற்று முழுதாகச் செயலிழந்துவிடும். என்றாலும் நோர்வேயின் அனுசரணைப் பணிகள் புது வடிவில் தொடரும். இலங்கை அரசு தன்னிச்சையாகப் போர்நிறுத்த உடன்படிக்கையில் இருந்து விலகிக் கொண்டாலும், நோர்வே உட்பட சர்வதேச சமூகம் அதனை ஏற்றுக்கொண்டுள்ளது. - இப்படிக் கூறுகிறார் வெளிவிவகார அமைச்சர் ரோஹித்த போகொல்லாகம.

போர் நிறுத்த உடன்படிக்கையில் இருந்து இலங்கை அரசு விலகிக் கொண்டதன் காரணங்களை அமைச்சர் ரோஹித்த போகொல்லாகம நேற்று ஊடகவியலாளர்களுக்கு விளக்கினார்.

வெளிவிவகார அமைச்சில் நேற்று இடம் பெற்ற செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் மேலும் கூறியவை வருமாறு:-

2002ஆம் ஆண்டு ரணில் விக்கிரமசிங்கவும், பிரபாகரனும் செய்து கொண்ட யுத்த நிறுத்த உடன்படிக்கையினால் நாட்டுக்கோ, நாட்டுமக்களுக்கோ எந்த நன்மையும்

(12 ஆம் பக்கம் பார்க்க)




இலங்கையிலிருந்து வெளியேற தயாராகிறது யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு.

### உயர்தரபரீட்சை முடிவுகள்:

## கணிதம், உயிரியல் துறைகளில் மாவட்டத்தில் ஹாட்லி முதலிடம்

### கலை-யூனியன், வர்த்தகம்-சென்.ஜோன்ஸ் கல்லூரிகளுக்கு

யாழ்பாணம்,ஜன.5

நேற்று யாழ்பாணத்தில், கல்வித் திணைக்களம் ஊடாக வெளியான ஜி.சி.ஈ உயர்தரப் பரீட்சை முடிவுகளின் பிரகாரம், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாவட்ட மட்டத்தில் கணிதம் , உயிரியல் ஆகிய இரண்டு துறைகளிலும் முதலாவது இடத்தைப் பெற்றுள் ளது.

கலைத்துறையில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் வர்த்தக துறையில் சென்.ஜோன்ஸ் கல்லூரியும் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடங்களையும் பெற்றுள்ளன.

ஜி.சி.ஈ(உயர்தரம்) பரீட்சையின் முடிவுகள் நேற்று யாழ்பாணத்தில் வெளியாகின. விமானம் மூலம் நேற்று பிற்பகல்எடுத்து வரப்பட்ட முடிவுகள் சகல வலயங்களுக்கும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளே மகேஸ்வரனைக் கொன்றனர் என அடித்துக் கூறுகின்றார் போகொல்லாகம

கொழும்பு, ஜன. 05

மகேஸ்வரன் எம்.பியை புலிகளே படுகொலை செய்தனர். அதற்கான சகல ஆதாரங்களும் இருக்கின்றன என அடித்துக் கூறுகின்றார் வெளிவிவகார அமைச்சர் ரோஹித்த போகொல்லாகம.

வெளிவிவகார அமைச்சில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதில் அளிக்கும் போதே அவர் இப்படிக் கூறினார்.

"நாடாளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரனின்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வெளியேறும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்காக ஐ.நா. மனித உரிமைகள் கண்காணிப்புக் குழுவை நிறுத்துக!

### அமெரிக்காவைத் தளமாகக் கொண்டியங்கும் அமைப்புக் கோரிக்கை

நியூயோர்க்,ஜன.05

இலங்கையிலிருந்து போர் நிறுத்தக் கண்காணிப்பாளர்கள் வெளியேறும் நிலையில் அவர்களுக்குப் பதிலாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கண்காணிப்புக் குழுவை அங்கு ஏற்படுத்துமாறு சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் வேண்டுகோள்விடுத்துள்ளது.

அமெரிக்காவைத் தளமாகக்கொண்டு இயங்கும் மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசியாவிற்கான பிரதி இயக்குநர் இலைனி பியர்ஸன் விடுத்துள்ள அறிக்கையிலேயே இது

(12 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயில்
## ஹனுமத் ஜயந்தி தினம்
### 07.01.2008 திங்கட்கிழமை



காலை: 8.30 மணி - 108 கலச அபிஷேகம்
ந.பகல்: 12.00 மணி - சந்தன அலங்கார பூஜை
ந.பகல்: 1.00 மணி அன்னதானம்
காலை 10 மணி முதல் 12.00 மணிவரை அடியார்கள் பொங்கிப் படைக்கலாம்.
ஹனுமத் ஜயந்தி பொது உபயமாக நடை பெறுவதால் அனைத்து அடியார்களும் உபயத்தில் பங்கு கொள்ளலாம்.

**அஞ்சனை மைந்தன் அருள் அனைவருக்கும் கிடைப்பதாக!**

(69698)

மருதனார்மடம்
தொ.பே.எண்:021 222 3648.

ஆதீனகர்த்தா
சிவஸ்ரீ இ.சுந்தரேஸ்வரக் குருக்கள்.

## முதலாம் ஆண்டு நினைவில்



உதிப்பு 25 - 11 - 1925
உதிர்வு 18 - 12 - 2006

**திருமதி செல்லம்மா சங்கரப்பிள்ளை**
திதி: 05.01.2008

அன்புடன் அரவணைத்து அறிவினை நன்று ஊட்டி
அவனியில் நாம்வாழ வழிகாட்டிய தெய்வமே
ஆயிரம் உறவுகள் இருந்துமென்ன
அவையனைத்தும் உங்கள் அன்புக்கு ஈடாகுமா
ஆண்டொன்று சென்றது அம்மா
ஆறவில்லை எம் துயரம்
ஆண்டுஒன்றென்ன பல சென்றாலும்
எம் விழிகள் என்றும் நிலைத்திருக்கும்
உங்கள் இனிய முகம்

மீசாலை வடக்கு,
மீசாலை.
(சி/ 55038)
குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில் 24 - 09 - 1949
ஆண்டவன் மடியில் 06 - 12 - 2007

**அமரர் காசிப்பிள்ளை கதிர்காமு**

பாசக் கயிறெறிந்து பகைவர்களின்றி பரந்து பட்டுப் பழகும் உள்ளம்
படைத்த சகோதரனே நீர் தூரத்தில் இருந்து தூரம் சென்றதனால்
துயரத்தில் துடிக்கின்றோம் துயர் துடைக்க வருவீரா?

பரிஸ் நகரில் கடந்த 06.12.2007 வியாழக்கிழமை சிவபத மடைந்த எமது அன்புச் சகோதரன் காசிப்பிள்ளை கதிர்காமு அவர்களின் துக்கச் செய்தி அறிந்து நேரிலும் தொலைபேசியிலும் அஞ்சலி மூலமும் துயர் பகிர்ந்து மற்றும் பல வழிகளிலும் உதவிகள் புரிந்தோருக்கும் நன்றியைத் தெரிவிப்பதோடு,இன்று (05.01.2008) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் அஞ்சலி நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

'தாயகம்'
பருத்தித்துறை வீதி,
சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி.

தகவல்: சகோதரர்கள்:
கா.செந்திவேல், கா.செங்காதேவி,
கா.நிர்மலாவதி, கா.பரமேஸ்வரி.

## மரண அறிவித்தல்

### சங்கரக்குட்டி சுகுமார்

*(முன்னாள் அரஸ்கோ ஊழியர்)*



இந்தியாவைப் பிறப்பிடமாகவும் இல. 5 6/1, யமுனா வீதியைப் வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரக்குட்டி சுகுமார் வெள்ளிக்கிழமை (04.01. 2008) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரக்குட்டி-பார்வதி தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான இளையதம்பி-வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் மருமகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கனகரத்தினம்(பெயின்ரர்) அமுதா, பவா(கனடா),ராசன்(சவூதி),உதயன் ஆகியோரின் அன்புத் தந்தையும் முருகேசு, புஸ்பராச(கனடா), யசோ, ரஞ்சிதமலர்(ஆசிரியை, யா/ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சுதன்(கனடா), சுமன்(கனடா), பிரகாஷ் (கனடா), சுதா, பிரதீப், வேணி, வாகிஷன், பிரியன்(கனடா), சர்மிதா, தர்ஷன், இந்திரன், சுபாஷினி, ஆகாஷ், திருஷ்கா, சுயானா ஆகியோரின் அன்புப்பேரனும், பிரியா, அனோஜன் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (06.01.2008) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 9 மணிக்கு செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

56/1, யமுனா வீதி,
நல்லூர்.
(69633)
தகவல்:
குடும்பத்தினர்.

## தாதியர் பரீட்சை நாளை காலையில்

யாழ்ப்பாணம்,ஜன.5

குடும்ப நல தாதிய உத்தியோகத்தர்களுக்கான விணைத்திறன்காண் தடைப்பரீட்சை நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு தாதியார் பயிற்சிக் கல்லூரியில் நடைபெறும் .

இவ்வறிவித்தலை இப்பரீட்சைக்கு தோற்றும் பரீட்சார்த்திகள் கவனத்தில் கொள்ளுமாறு யாழ்.போதனா வைத்திய சாலைப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

(-1)

### இந்து சமயப் பேரவை-யாழ்ப்பாணம்

உடுவில் கிழக்கு கற்பகப்பிள்ளையார் கோவில் பரிபாலனசபை, இளந்தொண்டர் சபை ஆகியன இணைந்து நடத்தும்

**திருவாசக முற்றோதல் 06.01.2008**

நிகழும் சர்வசித்து வருடம் மார்கழித் திங்கள் 21 ஆம் நாள் நாளை (06.01.2008) ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணி தொடக்கம் திருவாசக முற்றோதல் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது. இந் நிகழ்வில் பங்கு கொண்டு திருவருள் பெற்றுய்யும் வண்ணம் கேட்டுக் கொள்கிறோம்.

பரிபாலனசபை,
கற்பகப்பிள்ளையார் கோவில்,
உடுவில் கிழக்கு.
(69760)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக பணியாளர்
திருமதி ஜெபஷிராணி கிரிதரன்
அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி சத்தியதேவி சபாநாதன்

அவர்கள் இவ்வுலகு நீத்து இறையுலகு எய்திய இந்த வேளையில் அன்னாரின் ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திப்பதுடன் குடும்பத்தினரின் பிரிவுத் துயர் பகிர்கின்றோம்.

முகாமையாளரும்,
ஊழியர்களும்,
ஹற்றன் நஷனல் வங்கி,சுன்னாகம்.
(69756)

### வேவின்சுலா அக்கடமி புங்கன்குளம்

2010 ஆம் ஆண்டிற்கான கலை, வர்த்தகப் பிரிவுகள் ஆரம்பம்
காலம்: 05.01.2008
சனி மாலை 5 மணி

### இறைச்சிக் கோழி

புறோயிலர், கல்பேட் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் சுத்தம் செய்து தினமும் பெற்றுக் கொள்ளலாம்.

சிவகுமாரன் பாம்,
கல்வியங்காட்டுச் சந்தி.

ஸ்ரீராமஜெயம்

## ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்



### தியாகராசா மகேஸ்வரன்

(இந்து சமய கலாசார அலுவல்கள் முன்னாள் அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர்)

01.01.2008 அன்று இறைபதமடைந்ததையிட்டு அவர் ஆத்மா இறைதிருவடிகளில் சாந்திபெறப் பிரார்த்தித்து அன்னாரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கும் சைவத் தமிழ் மக்களுக்கும் ஆறுதல் தெரிவிக்கின்றோம்.

ஓம் சாந்தி!ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!
சிவஸ்ரீ.இ.சுந்தரேஸ்வரக் குருக்கள்,

## புண்ணியத்தி னறுபது ஆண்டு பொலிக பணி தொடர்க என்றும்



### திரு வே.தி. செல்வரத்தினம்

(மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளரும் யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளரும்)

கண்ணியமாய்க் கல்விப் பணிப்பாளராய்
கருத்தூன்றி யாழ்ப்பான வலயம் தன்னில்
எண்ணியதோர் ஏற்றமிகு நலங்கள் பதித்தே
எழிலார்ந்த மாவட்டப் பணிகள் செய்து
நண்ணிய வாசிரியர் சிறார்கள் நலங்கள்
நனிசிறக்கக் காத்துமகிழ் கின்ற வேளை
புண்ணியத்தி னறுபது ஆண்டு விழாவே
பொலிகபணி தொடரவென்றும் வாழ்த்துகின்றோம்

நல்லூர் கோட்டம்.
கோட்டக்கல்வி அலுவலர்,
அதிபர்கள்.

## பிறந்த தின நல்வாழ்த்துக்கள்

மணிவிழா நாயகன்
உயர்திரு. வே.தி.செல்வரத்தினம்
(யாழ்ப்பாண மாவட்ட மேலதிக கல்விப் பணிப்பாளரும், யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளரும்)



துணிச்சலும் நேர்மையும் கண்ணியமும் அயரா உழைப்பும் அர்ப்பணிப்பும் ஒருங்கே அமைந்த கல்வி நிர்வாகியாக காலத்தை வென்று கடினமான சுமைகளைத் தாங்கி அரும்பெரும் கல்விப் பணியாற்றிக் கொண்டிருக்கும் பெருமகனை நாம் நன்றிப் பெருக்குடன் அவர் பணி தொடரவும் சகல சௌபாக்கியங்களும் பெற்று குடும்ப சகிதம் பல்லாண்டு காலம் வாழவும் வாழ்த்துகின்றோம்.

கோப்பாய் ஆசிரியகலாசாலைக் குடும்பம்.

## கண்ணீர் அஞ்சலி

எமது கழக உறுப்பினரும் லிங்கன் செரமிக்ஸ் உரிமையாளருமாகிய
**பரமலிங்கம் உதயகுமாரன்**
அவர்களின் மறைவைக் கேள்வியுற்று துயரடைகின்றோம். அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இல. 165, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/ 55039)
யாழ். வணிகர் கழகம்.


## COMPUTER EXPRESS
Institute of Information Technology
#15, Sirambiyadi Lane, Jaffna.021 222 8250
Branch : 167, Kasthuriyar Rd, Jaffna 0777222422

ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்

**Diploma in Hardware Engineering**
❖ Assembling ❖ Upgrading ❖ Troubleshooting ❖ Fault finding ❖ Repairing
❖ Servicing ❖ Software Installation ❖ Configuring ❖ Networking
Course Fee : 2000/=

**Diploma in Video Editing**
முன்னணி Video Mixing Software களுடாக
❖ Adobe Photoshop ❖ Adobe Premier ❖ Cool3D Studio
❖ Pinnacle Studio ❖ VCD Cutter ❖ Capturing
Course Fee : 3000/=

**Diploma in Graphic Designing**
❖ Adobe Photoshop ❖ Corel DRAW ❖ Cool3D Studio
❖ Micro Media Flash
Course Fee : 2000/=

**Diploma in Computerized Accounting**
ACCPAC + QuickBooks + MYOB ஆகிய முன்னணி Accounting Software களினூடாக கற்பிக்கப்படும்.
Course Fee : 3500/=

வகுப்புக்கள் ஆரம்பம் : 07/01/2008 - 9AM


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து அரசாங்கம் விலகியமை
# சர்வதேச மட்டத்தில் விடுதலைப் புலிகளைப் பலப்படுத்தும்

## இப்படிக் கூறுகிறார் ரவூப் ஹக்கீம்

கொழும்பு,ஜன.5

போர்நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து ஒரு தலைப்பட்சமாக அரசாங்கம் விலகிக் கொள்வது என்பது சர்வதேச சமூகத்தின் மத்தியில் விடுதலைப் புலிகளைப் பலப்படுத்து



கின்ற விடயமாக மாறி விடும் அபாயத்தைக் கொண்டுள்ளது என்பதை அரசாங்கம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இப்படிக் கூறியுள்ளார் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம்.

போர் நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து அரசு விலகிக் கொள்வது தொடர்பாக 'பி.பி.ஸி' செய்திச் சேவைக்குப் பல முக்கிய பிரமுகர்கள் பேட்டியளித்திருந்தனர். அதன்போதே ஹக்கீம் இவ்வாறு தெரிவித்தார்.

அந்தப் பேட்டியின் சாராம்சம் வருமாறு:

எதிர்காலத்தில் புதிய ஒரு யுத்த நிறுத்த உடன்படிக்கையை செய்ய முயற்சிக்கின்ற வேளைகளில், ஏற்பாட்டாளர் தரப்பை மத்தியஸ்தர் தரப்பாக மாற்ற வேண்டும் என்று புலிகள் கோரிக்கை விடுத்து சர்வதேச சமூகத்தின் நேரடியான தலையீட்டை நாட்டில் ஏற்படுத்திவிடக்கூடிய விடயமாகவும் இது மாறிவிடலாம். இதனை நாட்டின் இறைமையைப் பற்றியும் ஒருமைப்பாட்டைப் பற்றியும் பெரிதாகப் பீற்றிக் கொள்கின்ற சிங்கள தேசியவாத சக்திகள் உணர்ந்து கொள்ள வேண்டும் - என்று ஹக்கீம் மேலும் கூறினார்.

**இரா.சம்பந்தன்**

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் எம்.பி.கூறியதாவது:



அரசின் இந்த அறிவிப்பு பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தக் கூடிய விடயம் அல்ல. ஏனென்னில் இலங்கை அரசே கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக யுத்த நிறுத்த உடன்பாட்டை மிகவும் பகிரங்கமாக மீறிச் செயற்பட்டிருக்கின்றது.

யுத்த நிறுத்த உடன்பாட்டைப் பொறுத்தவரையில் இரண்டு விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன. ஒன்று இராணுவ ரீதியான விடயங்கள். அந்த விடயங்களைப் பற்றி நாங்கள் பேசவில்லை. அதை இரண்டு தரப்பும் மீறியிருக்கலாம். நாங்கள் பேசுவது சிவிலியன் விடயங்கள் பற்றியது.

யுத்தநிறுத்த உடன்படிக்கையின் முக்கிய நோக்கம் என்னவெனில், வட - கிழக்கில் வாழ்கின்ற சிவிலியன்கள் பாதுகாப்பாக, இயல்பு வாழ்க்கை வாழவேண்டும். அவர்கள் மீளக்குடியமர்த்தப்பட வேண்டும். அவர்களுக்குப் புனர்வாழ்வு அளிக்கப்பட வேண்டும். இவற்றைச் செய்ய இலங்கை அரசு தவறியது மட்டுமன்றி, மேலும் இலட்சக் கணக்கான மக்கள் தமது கிராமங்களைவிட்டு, மாவட்டங்களை விட்டு இடம்பெயரவும் வழிசெய்தது. எங்களைப் பொறுத்தவரையில் இவை இலங்கை அரசின் பாரிய யுத்த நிறுத்த மீறல்கள்.

ஆனால், இந்த அறிவிப்பு ஒரு வகையில் பின்னடைவே. ஏனெனில் யுத்தம், எவ்வளவு காலம் இடம்பெற்றாலும் ஒரு கால கட்டத்தில் யுத்தநிறுத்தம் ஏற்படுத்தப்பட்டு பேச்சுகள் இடம்பெற்றே ஆகவேண்டும். பேச்சுக்கள் மூலமே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாணக்கூடிய நிலைமை பிறக்கும். அதை வைத்துப் பார்க்கும்போது இந்த அறிவிப்பு பின்னடைவு என்று கூறலாம்.

அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் புலிகள் கொடியை ஏற்றுவதும் ஒரு யுத்த நிறுத்த மீறலாகப் பதிவு செய்யப்படும். அதேவேளை, இலட்சக் கணக்கான மக்களை இடம்பெயரச் செய்யும் படையினரின் நடவடிக்கையில் ஒவ்வொரு குடும்பத்தினுடைய நிலைமையும் ஒவ்வொரு யுத்த நிறுத்த உடன்படிக்கை மீறலாகக் கருதப்பட வேண்டும். அவ்விதமாகக் கருதும்போது அரசுடைய யுத்த நிறுத்த மீறல்கள் அதிகமாக இருக்கும் - இப்படிச் சம்பந்தன் எம்.பி. கூறினார்.

**டக்ளஸ் தேவானந்தா**

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைவரும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா கூறியதாவது:



மாவிலாறு பிரச்சினை வரைக்கும் அரசு மௌனமாய பார்த்துக் கொண்டுதானிருந்தது. ஆனால் மாவிலாற்றுப் பிரச்சினைக்குப் பின்னரே தற்காப்பு நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டிய தேவை அரசுக்கு எழுந்தது. யுத்த நிறுத்த உடன்பாட்டிலிருந்து விலக்கிக் கொள்வதாக விடுக்கப்பட்ட அறிவிப்பின் அர்த்தம், அரசாங்கம் முழுமூச்சுடன் யுத்தத்தில் ஈடுபடப்போகிறது என்பதுதான் என்று நான் நம்பவில்லை. புலிகளில்தான் அது தங்கியுள்ளது. புலிகள் பேச்சுக்குத் தயார் என்றால் அரசும் தயார் - இப்படி அவர் கூறினார்.

**சித்தார்த்தன்**

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத் தலைவர் த.சித்தார்த்தன் கூறியதாவது:

இலங்கை அரசைப் பொறுத்தவரையில் யுத்த நிறுத்த உடன்பாட்டிலிருந்து விலகுவதாக உத்தியோகபூர்வமாக இப்போது அறிவித்திருக்கின்றது. ஆனால், இந்த உடன்பாட்டிலிருந்து எப்போதோ இரண்டு தரப்புகளுமே விலகிவிட்டன. இதனால் கள நிலவரங்களில் பெருமளவில் மாற்றம் ஏதும் வருமென்று நான் நினைக்கவில்லை - இப்படி சித்தார்த்தன் கூறினார்.

**ஆனந்தசங்கரி**

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி கூறியதாவது:



ஆரம்பத்திலிருந்தே நான் இந்த யுத்த நிறுத்த உடன்பாட்டை ஆதரிக்கவில்லை. காரணம், விடுதலைப்புலிகள், அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்து தமது இஷ்டம்போல் எதனையும் செய்துவிட்டுப்போக அது அனுமதியளித்தது. ஆனால் இதே போன்று புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் சென்றுவர மற்றவர்களுக்கு எந்த ஏற்பாடும் அதில் இருக்கவில்லை. இதனுடைய விளைவாக யுத்த நிறுத்த உடன்படிக்கைக்கு முன்னர் இருந்ததைவிட மோசமான நிலைக்குப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேச மக்கள் தள்ளப்பட்டார்கள்.

அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் வாழ்ந்த மக்கள் கூட இந்த யுத்தநிறுத்த உடன்பாட்டின் மூலம் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டு, மொத்தத்தில் சகல தமிழர்களும் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் வாழ்வதாகவே இவ்வளவு காலமும் நிலைமை இருந்தது.

ஆகவே யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் இருந்து அரசாங்கம் விலகுவது கவலை தரும் விடயம் அல்ல. என்னைப் பொறுத்த வரையில் இது ஒரு மகிழ்ச்சியான விடயம் தான் - என்று ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

**ஸ்ரீதரன்**

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (பத்மநாபா அணி) பொதுச் செயலாளர் ஸ்ரீதரன் கூறியதாவது:

இந்தப் போர் நிறுத்த உடன்படிக்கையில் அர்த்தம் இருந்ததாக எமக்குத் தெரியவில்லை. ஏனெனில் இந்த ஒப்பந்த காலத்தில்தான் மாற்றுக் கருத்துடையவர்கள் பலரும் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இந்த ஒப்பந்தத்தில் தமிழ்ச் சமூகத்தில் இருக்கின்ற வெவ்வேறு அரசியல்த் தலைவர்களின் பாத்திரம் குறித்து எதுவும் கூறப்பட்டிருக்கவில்லை. இதற்கப்பால் மோசமான யுத்தமொன்று ஏற்கனவே நடந்து கொண்டிருக்கின்றது. ஆக, யுத்த நிறுத்த –உடன்பாடு என்பது அர்த்தமிழந்த விடயமாகவே உள்ளது.

**யோகராஜன்**

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் யோகராஜன் கூறியதாவது:

போர் நிறுத்த ஒப்பந்தம் கடந்த இரண்டு வருடங்களாகவே மதிக்கப்டாமல் இருந்தது. இப்போது சர்வதேசத்துக்கு அறிவிப்பதற்காக யுத்தநிறுத்த உடன்பாட்டிலிருந்து விலகுவதாக அரசு தெரிவித்திருக்கின்றது. அவ்வளவுதான் என்று நாம் நினைக்கிறோம். இதனால் போர்க் களத்தில் எந்த மாற்றமும் ஏற்படப்போவதில்லை- இப்படி யோகராஜன் கூறினார்.

**இராதாகிருஷ்ணன்**

பிரதி அமைச்சரும் மலையக மக்கள் முன்னணியின் உறுப்பினருமான பெ.இராதாகிருஷ்ணன் கூறியதாவது:

இலங்கை அரசின் முடிவு, அதிர்ச்சி தருவதாக உள்ளது. போர் நிறுத்த ஒப்பந்தத்தில் இருந்து விலகுவது என்பது ஒரு விவேகமற்ற முடிவு என்றே நான் கருதுகிறேன். இந்த ஒப்பந்தத்தை இருசாருமே நன்கு கடைப்பிடிப் பார்களானால் சமாதானம் உருவாவதற்கு ஒரு நல்ல வாய்ப்பு இருக்கின்றது.

அது இப்போது கை நழுவிப் போய் யுத்தமே முனைப்புடன் முன்னெடுக்கப் படப்போகின்றது - என்று இராதாகிருஷ்ணன் தெரிவித்தார். (ப-2)

---

# மைதானத்தில் குழப்பத்தில் ஈடுபடும் விளையாட்டுக் கழகங்களுக்கு எதிராக உரிய நடவடிக்கைகள் அவசியம்!

*யாழ்.மாவட்டத்தில் இடம்பெறும் விளையாட்டு நிகழ்வுகளில் குழப்பங்களை உருவாக்குவதிலும் அங்கு கடமையாற்றும் மத்தியஸ்தர்களை தாக்குவதிலும் சில கழகங்கள் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றன. இது தொடர்பாக இப் பகுதியில் முன்னர் நாம் பல தடவைகள் குறிப்பிட்டிருந்தோம்.*

*குறித்த போட்டியில் தாம் தோல்வியடையப் போகின்றோம் என்றவுடன் போட்டியைக் குழப்பி அதன் மூலம் வெற்றியைத் தமதாக்கிக் கொள்வதற்கு சிலர் முயன்று வருவதை விளையாட்டுச் சமூகம் ஒரு போதும் அனுமதிக்கக் கூடாது. அவர்களின் நோக்கம் நிறைவேறாமல் தடுப்பதில் விளையாட்டுத் துறைசார் அமைப்புகள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.*

*கடந்த வாரம் அராலி சில்வெஸ்ரார் விளையாட்டுக் கழகம் 7 பேர் கொண்ட அணிகள் பங்கு பற்றும் உதைபந்தாட்டப் போட்டி ஒன்றை நடத்தியது.*

*இதன் இறுதி ஆட்டத்தில் இளவாலை யா/ கென்றிசியன் விளையாட்டுக் கழக அணியும், மயிலங்காடு ஞான முருகன் விளையாட்டுக் கழக அணியும் மோதிக்கொண்டன. இதன்போது போட்டியின் மத்தியஸ்தர் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக வீரர்களாலும் ஆதரவாளர்களாலும் கடுமையாகத் தாக்கப்பட்டார்.*

*விளையாட்டின் போது ஞானமுருகன் அணி செய்த தவறுக்காக மற்ற அணிக்கு உதை ஒன்றை வழங்கியதற்காகவே ஞான முருகன் வீரர்கள் நடு மைதானதில் வைத்து மத்தியஸ்தரை ஓட ஓட தாக்கினார்கள். அதிலும் முக்கியமாக ஞானமுருகன் அணியின் மூத்த வீரர்களில் ஒருவர் இந்த விரும்பத்தகாத செயற்பாட்டில் ஈடுபட்டமை அனைவரையும் வெறுப்புக்குள்ளாக்கியுள்ளது. குடாநாட்டில் உதைபந்தாட்டத்தில் மிகவும் பிரபலமான அணிகளில் ஒன்றான ஞான முருகன் அணி, பார்வையாளர்களால் நிறைந்திருந்த மைதானத்தில் இவ்விதம் நடந்து கொண்டமையால் தனது மானத்தை மைதானத்தில் பறக்கவிட்டது.*

*மைதானத்தில் நடுவர் வழங்கும் தீர்ப்புத் தான் இறுதியானது. தீர்ப்புக்குக் கட்டுப்பட்டு விளையாட வேண்டிய பொறுப்பு அனைத்துக் கழகங்களுக்கும் உண்டு. பந்தை கோல் காப்பாளர் பிடித்து ஆறு விநாடியில் பந்தை வெளியேற்ற வேண்டும். ஆனால் ஞானமுருகன் கோல் காப்பாளர் உரிய விதியைப் பின்பற்றாததுடன் நேரத்தை கடத்தும் முகமாகப் பந்தை கையில் கொண்டு அங்கும் இங்கும் நடந்தார்.*

*இந் நிகழ்வு இடம் பெற்றுக் கொண்டிருக்கையில் ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் 3 இற்கு 2 கோல்கள் என்ற முண்ணணியில் இருந்தது.*

*கோல் காப்பாளர் தன்னிடம் இருந்த பந்தை வெளியேற்றாது நேரம் கடந்த நிலையில் தனது எல்லைக்கு வெளியே பந்துடன் வந்து இரண்*

## விளையாட்டு அரங்குகளில்

*டாம் குற்றத்தையும் புரிந்தார்.*

*இத்தகைய நிலையில் முதலாவது குற்றமான 6 விநாடிகளில் பந்தை வெளியேற்றாத குற்றத்துக்காக மற்ற அணிக்கு நேரடி உதை ஒன்றை நடுவர் வழங்கினார்.*

*இந்த வேளையில் ஞானமுருகன் அணியின் முக்கிய வீரர் ஒருவர் மத்தியஸ்தரை நெஞ்சில் பிடித்துத் தள்ளித் தாக்கியபோது ஏனைய அணியின் ஆதரவாளர்களும் மைதானத்தில் புகுந்து மத்தியஸ்தரை தாக்கத் தொடங்கினார்கள்.*

*இதன் காரணமாக மத்தியஸ்தரைக் காப்பாற்ற போட்டி ஏற்பாட்டாளர்களும் மற்றும் ஊரவர்களும் முயன்ற வேளையில் இரு பகுதியினருக்கும் இடையிலும் கைகலப்பு ஏற்பட்டது.*

*இதன்போது ஞானமுருகன் ஆதரவாளர்களினால் யங்கென்றீசியன்ஸ் சிரேஷ்ட வீரர் ஒருவரும் தாக்கப்பட்டார். எனினும் யங்கென்றீசியன்ஸ் விளையாட்டுக் கழகம் [illegible] பட முனைந்த தமது ஆதரவாளர்களைக் கட்டுப்பாட்டில் கொண்டு வந்து பண்பாக நடந்து கொண்டமை அனைவரையும் கவர்ந்தது.*

*போட்டி ஏற்பாட்டாளர்கள் போட்டியை எப்படியும் முடிக்க வேண்டும் என்பதில் கண்ணாகச் செயற்பட்டார்களே தவிர, நடந்த தவறைக் கருத்தில் கொள்ள மறுத்து செயற்பட்டமையும் வேதனைக்குரியதாகும். மீண்டும் மத்தியஸ்*

## நடுவரின் தீர்ப்பை ஏற்றுக் கொள்ளும் மனநிலை வீரர்களுக்கு இருக்க வேண்டும்

*தரை சமாதானப்படுத்தி விளையாட்டை நடத்த முற்பட்டார்கள். இந்த நிலையில் மத்தியஸ்தரைத் தாக்கிய அணிவீரர்கள் சிவப்பு அட்டை காட்டி வெளியேற்றப்பட வேண்டும் என்பது சர்வதேச விதியாகும். இதனை மத்தியஸ்தர் செய்ய முயன்றும் அது முடியாமல் போனது.*

*போட்டியை நடத்துபவர்களும் நீதியாகவும் நேர்மையாகவும் போட்டியை நடத்தவேண்டும். போட்டியைநடத்தி விட்டோம் வருமானம் கிடைத்து விட்டது என்று சிந்தித்தால் மட்டும் போதாது. ஆனாலும் இரு அணிகளையும் சமாளிக்கும் விதமாக இறுதிப்போட்டிகளில் கலந்துகொண்ட இரு அணிகளுக்கும் இணைச்சம்பியன் வழங்கி பிரச்சினையைத் தீர்க்க முயன்றார்கள் ஏற்பாட்டாளர்கள்.*

**விண்ணன்**

*ஏற்கனவே மத்தியஸ்தரை தாக்கியவர்கள் தொடர்ந்து விளையாட அனுமதிக்கப்பட்டால் தமக்குப் பாதுகாப்பு இல்லை எனக்கூறி எதிரான வீரர்கள் விளையாட மறுத்து வெளிச்சென்றனர். அத்துடன் போட்டியைப் பார்வையிடச் சென்ற வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் தலைவர், செயலாளர் ஆகியோருடன் ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணியின் இருவீரர்கள் தகாத வார்த்தைப் பிரயோகங்கள் மூலம் தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளனர்.*

*இத்தகைய கட்டுப்பாடற்ற ஒழுக்கமற்ற கழகங்கள் மீது வலிகாமம் உதைபந்தாட்ட லீக் எத்தகைய நடவடிக்கையை மேற்கொள்ளப் போகின்றது என்பதே இப்போது எழுந்துள்ள கேள்வி.*

*போட்டி ஏற்பாட்டாளர்கள் மூன்றாம் இடத்திற்கான போட்டியை நடத்தாமலே 3ஆம், 4ஆம் இடங்களுக்கான பரிசில்களை எவ்வாறு வழங்கினார்கள் என்பது அடுத்து கேள்வியாகும்.*

*அதிலும் மூன்றாம் இடத்திற்கான போட்டியில் விளையாட மறுத்த கழக வீரர் எவ்வாறு தொடர் ஆட்ட நாயகனாகத் தெரிவு செய்யப்பட்டார். தொடர் ஆட்ட நாயகன் என்ற பெயருக்கே போட்டியை நடத்தியவர்களின் இத்தகைய செயல் பெரும் இழுக்காக அமைந்துள்ளது என்பதும் இந்த இடத்தில் சுட்டிக்காட்ட வேண்டியதாகும். 3 ஆம் இடத்திற்கான போட்டியில் கலந்துகொள்ள வேண்டிய இரு அணிகளும் தமக்குள் பிரச்சினை ஏற்படாமல் இருக்க தாம் விட்டுக் கொடுத்துச் செல்வதாகக் கூறி விலகியுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் இப்போது தெரிவிக்கிறார்கள். இந்தப் பெருந்தன்மையை மைதானத்தில் விளையாடிக் காட்டுவதே உண்மையான விளை யாட்டு வீரர்களுக்கு அழகாகும்.*

*குடாநாட்டில் உள்ள மூன்று உதைபந்தாட்ட லீக்குகளில் அதிக கழகங்களைக் கொண்டுள்ளதும் அதிக போட்டிகளை நடத்தும் கழகங்களைக் கொண்டதுமாக வலிகாமம் உதைபந்தாட்ட லீக் காணப்படுகின்றது. இந்த லீக்கைச் சேர்ந்த கழகங்கள் குடாநாட்டில் இடம்பெறும் போட்டிகளில் கலந்துகொண்டு சம்பியன்களாகவும் தெரிவுசெய்யப்பட்டு சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளன. இந்த வகையில் ஒழுக்கம் கட்டுப்பாடு மற்றும் விதிகள் சம்பந்தமான விடயத்திலும் அதிக அக்கறையும் கவனமும் கொள்ளவேண்டிய பொறுப்பும் கடமையும் வலிகாமம் உதைபந்தாட்ட லீக்குக்கு உண்டு. தவறுகள், பிழைகள் செய்பவர்கள் மீது உரிய முறையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அதனை பகிரங்கமாகவும் வெளிப்படுத்த வேண்டும். இதனை விடுத்து முகத்துக்கு அஞ்சி முடிவுகள் எடுப்பதைத் தவிர்த்தால் இந்த அராஜகச் செயல்கள் மேலும் தலைதூக்க ஆரம்பிக்கும்.*

*மிகவும் கட்டுப்பாடாக ஒழுங்கமைத்து போட்டிகளை நடத்திய வலிகாமம் உதைபந்தாட்ட லீக் இதனை சிறுவிடயமாக கருதாது உரிய நடவடிக்கையை மேற்கொண்டு ஏனைய கழகங்களுக்கும் ஒரு படிப்பினையைக் கொடுக்க வேண்டும்.*

*வலிகாமம் லீக் இந்த விடயத்தில் என்ன நடவடிக்கை எடுக்கப் போகின்றது என்பதைக் காத்திருந்து பார்ப்போம்.* ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சின் சதம்; இந்தியா முன்னிலை!



சிட்னி,ஜன.05

சிட்னி டெஸ்ட்டில் சச்சின் டெண்டுல்கர் அபாரமாக ஆடி ஆட்டமிழக்காமல் 154 ஓட்டங்கள் பெற்றுக்கொடுக்க இந்தியா முதல் இன்னிங்ஸில் 532 ஓட்டங்களைக் குவித்தது. இதன்மூலம் ஆஸ்திரேலியாவை விட இந்தியா 69 ஓட்டங்களால் முன்னிலை பெற்றது.

தொடர்ந்து தனது 2ஆவது இன்னிங்ஸைத் தொடங்கிய ஆஸ்திரேலிய அணி 3ஆம் நாள் ஆட்ட நேர முடிவில் விக்கெட் இழப்பின்றி 13 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. பில் ஜக்கிஸ் 8 ஓட்டங்களுடனும், ஹைடன் 5 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.

ஆஸ்திரேலியா, இந்தியா அணிகளுக்கிடையிலான 2ஆவது டெஸ்ட் போட்டி சிட்னியில் கடந்த புதன்கிழமைமுதல் நடைபெற்றுவருகின்றது. இந்தப் போட்டியின் முதல் இன்னிங்ஸில் ஆஸி. அணி 463 ஓட்டங்களைப் பெற்றது. தொடர்ந்து தனது முதல் இன்னிங்ஸை ஆடிய இந்தியா 2ஆம் நாள் ஆட்ட நேர முடிவில் 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 216 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

நேற்றுப் போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டம் நடந்தது. களத்தில் நின்ற சச்சின் டெண்டுல்கரும், சௌரவ் கங்குலியும் அதிரடியாக விளையாடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை மளமளவென உயர்த்தினார்கள். இந்த ஜோடி தம்மிடையே 108 ஓட்டங்களை இணைப்பாட்டமாகச் சேர்த்திருந்த நிலையில் சிறப்பாக விளையாடிக் கொண்டிருந்த கங்குலி 67 ஓட்டங்களுடன் ஹொக்கின் சுழலில் ஆட்டமிழந்தார். அவர் 78 பந்துகளைச் சந்தித்து 7 பவுண்டரிகளையும், ஒரு சிக்ஸரையும் விளாசியிருந்தார்.

தொடர்ந்து ஆடவந்த யுவராஜ் சிங் வெறும் 12 ஓட்டங்களுடன் பிரட் லீயின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ. ஆனார். அடுத்துக் களமிறங்கியவர்களான டோனி, கும்ளே ஆகியோர் தலா 2 ஓட்டங்களுடன் பிரட் லீயின் வேகத்தில் கில்கிறிஸ்ட்டிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்ததால் ஒரு கட்டத்தில் இந்திய அணி 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 345 ஓட்டங்கள் என்ற ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றிருந்தது.

அதன் பின்னர் டெண்டுல்கருடன் ஜோடி சேர்ந்த ஹர்பஜன் சிங் அவருக்குத் துணை நின்றதுடன், அதிரடியாக ஆடி ஓட்டங்களையும் குவித்தார். டெஸ்ட் போட்டிகளில் அதிக சதம் அடித்த பெருமையை ஏற்கனவே பெற்றுள்ள சச்சின் டெண்டுல்கர் நேற்று மேலும் ஒரு சதத்தை அடித்து சாதனை நிகழ்த்தினார். இது அவரது 38ஆவது சதமாகும். 160 பந்துகளில் 8 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக 100 ஓட்டங்களை அவர் எட்டினார்.

தொடர்ந்தும் டெண்டுல்கர் மற்றும் ஹர்பஜன் ஆகியோர் சிறப்பாக ஆடினர். ஹர்பஜன் அரைச்சதம் அடித்து அசத்தினார். அவர் 63 ஓட்டங்களை எடுத்திருந்த போது ஜோன்ஸனின் துல்லியமான பந்துவீச்சில் ஹசேயிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

ஹர்பஜன் மற்றும் சச்சின் ஜோடி இந்தியாவை ஆஸ்திரேலியாவின் முதல் இன்னிங்ஸ் ஓட்ட எண்ணிக்கையைக் கடக்க உதவியது. இந்த ஜோடி தம்மிடையே 129 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றது. இதன்மூலம் ஆஸி. அணிக்கு எதிராக 8ஆவது விக்கெட்டில் அதிக ஓட்டங்களைச் சேர்த்த ஜோடி என்ற பெருமையை சச்சின் - ஹர்பஜன் இணை பெற்றுக்கொண்டது. முன்னதாக 1979ஆம் ஆண்டு கிர்மானி - காவ்ரி ஜோடி பெற்ற 127 ஓட்டங்களே இதுவரை சாதனையாகவிருந்தது.

தொடர்ந்து 9ஆவது விக்கெட்டில் இணைந்த ஆர்.பி.சிங் மற்றும் சச்சின் டெண்டுல்கர் இந்தியாவை 500 ஓட்டங்களைக் கடக்கச் செய்தனர். எனினும், ஆர்.பி.சிங் 11 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். கடைசியாக ஆட வந்த இஷாந்த் சர்மா 23 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். இறுதியில் இந்திய அணி 138.2 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 532 ஓட்டங்களைக் குவித்தது.

இறுதிவரை ஆட்டமிழக்காமலிருந்த டெண்டுல்கர் 154 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். அவரது ஓட்ட எண்ணிக்கையில் 14 பவுண்டரிகளும் ஒரு சிக்ஸரும் அடங்குகின்றன.

ஆஸி. அணியின் பந்துவீச்சில் பிரட் லீ 5 விக்கெட்டுகளையும், ஜோன்ஸன் மற்றும் பிரட் ஹொக் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும், ஸ்ருவேட் கிளார்க் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

## நியூஸிலாந்து வேகங்களிடம் சரணடைந்தது பங்களாதேஷ்

டுனிடின், ஜன.05

நியூஸிலாந்து வேகங்கள் அச்சுறுத்த நேற்று ஆரம்பமான முதல் டெஸ்ட்டின் முதல் இன்னிங்ஸில் பங்களாதேஷ் அணி 137 ஓட்டங்களுக்குள் சுருண்டு படுத்தது.

பங்களாதேஷ் வீரர்கள் எவரும் நிலைத்து நின்று ஆடவில்லை. அந்தளவுக்கு நியூஸிலாந்து வேகங்கள் அபாரமாகப் பந்துவீசினர். ஓரளவு போராடிய ரமீம் இக்பால் 53 ஓட்டங்களை அதிகபட்சமாப் பெற்றுக்கொடுத்தார். பங்களாதேஷ் அணி 46.1 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 137 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. நியூஸிலாந்தின் பந்துவீச்சில் கிறிஸ் மாட்டின் 4 விக்கெட்டுகளையும், ஜேக்கப் ஓரம் 3 விக்கெட்டுகளையும், கைல் மில்ஸ் 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து தனது முதல் இன்னிங்ஸை ஆடிய நியூஸிலாந்து அணி நேற்றைய முதல் நாள் ஆட்டநேர முடிவில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 156 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ஆரம்ப வீரரும் மீண்டும் அணிக்குள் அழைக்கப்பட்டவருமான மத்தியூ பெல் ஆட்டமிழக்காமல் 74 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்து தொடர்ந்தும் நம்பிக்கை தருகின்றார். இன்று போட்டியின் 2ஆம் நாள் ஆட்டம் தொடரும்.




### மேற்கிந்தியத் தீவுகளுடனான 2ஆவது டெஸ்ட்

## தென்னாபிரிக்கா தடுமாற்றம்

கேப்டவுன், ஜன.05

கேப்டவுனில் நடைபெற்றுவரும் மேற்கிந்தியத் தீவுகளுடனான 2ஆவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க அணியும் திணறல் தொடக்கம் கண்டுள்ளது. மேற்கிந்தியத் தீவுகள் முதல் இன்னிங்ஸில் பெற்ற 243 ஓட்டங்களுக்குப் பதிலளித்து ஆடிவரும் தென்னாபிரிக்கா நேற்றுமுன்தினம் நிறைவுபெற்ற 2ஆம் நாள் ஆட்ட நேர முடிவில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 218 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

நேற்றுமுன்தினம் இரண்டாம் நாள் ஆட்டம் நடந்தது. சந்தர்போல் 65 ஓட்டங்களுக்கு வெளியேற, முதல் இன்னிங்ஸில் 243 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

பின்னர் களமிறங்கிய தென்னாபிரிக்க அணியின் விக்கெட்டுகள் ஆரம்பத்திலிருந்து சீரான இடைவெளியில் சரிந்தன. ஜெரோம் டெய்லரின் வேகத்தில் மெக்கன்சி (23), கிரேம் சிமித் (28), ஆட்டமிழந்தனர். பின்னர் பிராவோவின் பந்துவீச்சு அச்சுறுத்தியது. இவரது பந்துவீச்சில் நம்பிக்கை நாயகன் கலிஸ் (36), அம்லா (32), டீ வில்லியர்ஸ் (2) ஆகியோர் வெளியேறினர்.

எனினும், தொடர்ந்து ஜோடி சேர்ந்த அஸ்வெல் பிரின்ஸ், மார்க் பௌச்சர் ஆகியோர் அணியின் சரிவைச் சரிசெய்து நம்பிக்கை தந்தனர். சிறப்பாக ஆடிய இந்த ஜோடி இதுவரை பிரிக்கப்படாத 6ஆவது விக்கெட்டில் 87 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. நேற்றுமுன்தினம் நிறைவுபெற்ற 2ஆம் நாள் ஆட்ட நேர முடிவில் தென்னாபிரிக்கா அணி 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 218 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

# ஹிலாரிக்கு ஆரம்பமே சறுக்கல்!

### அயோவா மாநில வாக்கெடுப்பில் தோல்வி



வாஷிங்டன், ஜன.05

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சி வேட்பாளராகப் போட்டியிடும் வாய்ப்பைப் பெற அயோவா மாநில வாக்காளர்களின் மத்தியில் நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் ஹிலாரி கிளின்ரன் தோல்வியடைந்தார்.

மேற்படி வாக்கெடுப்பில் ஜனநாயகக் கட்சி சார்பாக 44 வயதான பராக் ஒபாமா வெற்றி பெற்றுள்ளார். குடியரசுக் கட்சி சார்பில் இந்த மாநிலத்திலிருந்து மைக் ஹகாபி தேர்வாகியுள்ளார்.

அமெரிக்காவில் அடுத்த ஆண்டு தொடக்கத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. அமெரிக்கத் தேர்தல் முறையின்படி, ஜனாதிபதித் தேர்தலில் நிற்க விரும்பும் வேட்பாளர்கள் கட்சியின் சம்மதத்தைப்பெற வேண்டும். இதற்காக மாநிலங்கள் ரீதியான வாக்கெடுப்பு நடத்தப்படும்.

இதற்கான தேர்தல் பிரசாரமும் நடைபெற்று வரும். ஜனாதிபதித் தேர்தலின் முதற்கட்டமாக இது அமைகிறது. இந்த வாக்கெடுப்பில் முதல் மாநிலமாக அயோவாவில் நேற்றுமுன்தினம் வாக்கெடுப்பு நடைபெற்றது.

இதில் ஜனநாயக கட்சி சார்பில் வேட்பாளர் வாய்ப்பைப் பெற போட்டியிட்ட முன்னாள் ஜனாதிபதி கிளின்ரனின் மனைவி ஹிலாரி தோல்வியடைந்தார். அவர் 30 சதவீத வாக்குகளை மட்டுமே பெற்றார்.

கறுப்பினத்தைச் சேர்ந்த பராக் ஒபமா 36 சதவீத வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார். முதன்முறையாக நாடாளுமன்ற உறுப்பினராகி இருக்கும் 44 வயதான ஒபமா வாக்காளர்கள் மத்தியில் பிரபலமாகக் கருதப்படும் ஹிலாரியை பின்னுக்குத் தள்ளியிருப்பது பெரும் அதிர்ச்சியாகக் கருதப்படுகிறது.

இந்த மாநிலத்திலிருந்து குடியரசுக்கட்சி சார்பில் மைக் ஹகாபி வெற்றி பெற்றுள்ளார். இதேபோல் மற்றைய மாநிலங்களிலும் வாக்கெடுப்பு நடைபெற்று வெற்றி பெறும் வேட்பாளர் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவார்கள்.




# உயிரைப்பற்றி பயமில்லை கடமையைச் செய்வேன்

### பிலாவல் பூட்டோ பேட்டி

இஸ்லாமாபாத், ஜன. 05

உயிரைப்பற்றிக் கவலைப்படாமல் கடமையைச் செய்வேன் என்று பாகிஸ்தான் மக்கள் கட்சியின் தலைவர் பிலாவல் பூட்டோ தெரிவித்துள்ளார்.

சுட்டுக் கொல்லப்பட்ட பெனாஸிரின் மகன்தான் பிலாவல். பெனாஸிருக்குப் பிறகு இவர்தான் அவரது கட்சியின் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார். 19 வயதான அவர் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் படித்து வருகிறார். இணையத்தளம் மூலம் அவரிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அவர் பதிலளித்தார். அவர் கூறியவை வருமாறு:-

''எனது உயிருக்கு ஆபத்து இருப்பது எனக்கு நன்றாகத் தெரியும். இதுபற்றிக் கவலைப்படாமல் நான் என் கடமைகளை நிறைவேற்றப் பாடுபடுவேன். நான் பிறவித் தலைவர் இல்லை. நான் அரசியல் தலைவரோ சிந்தனையாளரோ இல்லை. கட்சியை வழிநடத்த எனக்கு ஒரு காலம் வரும். இப்போதைக்கு நான் கேள்வி கேட்டுத் தெரிந்துகொள்பவனாகத் தான் இருக்கின்றேன். பதில் அளிப்பவனாக இல்லை.'' - இவ்வாறு பிலாவல் கூறினார்.

''ஜனநாயகம் அல்லாத வழிமுறையில் கட்சித் தலைவராக வந்துவிட்டு ஜனநாயகத்தைப் பற்றிப் பேச உனக்கு என்ன உரிமை இருக்கிறது என்று என்னிடம் கேட்கிறார்கள். இது நல்ல கேள்விதான். இதுபோன்ற கேள்விகள்தான் ஜனநாயகத்தின் அடித்தளம். கேள்வி கேட்பதை நிறுத்தக்கூடாது.'' - என்றும் அவர் கூறினார்.

# அமெரிக்காவில் பிறந்த அல் - குவைதா உறுப்பினரின் 'வீடியோ' விரைவில்

நியூயோர்க், ஜன.05

அமெரிக்காவில் பிறந்த தனது சிரேஷ்ட உறுப்பினரான அடம் கடஹ்னின் செய்தியடங்கிய ஒளிநாடாவை அல் - குவைதா விரைவில் வெளியிடவுள்ளதாகத் அறிவித்துள்ளது.

அல் - குவைதாவின் ஊடக பிரிவினரான அல்-சஹாப் வெளியிட்டுள்ள அறிவிப்பொன்றிலேயே இது குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது. கடஹ்னின் உருவப்படமும் வெளியிடப்பட்டுள்ளது.

கலிபோர்னியாவில் பிறந்த இவருக்கு எதிராக அமெரிக்கா தேசத்துரோக குற்றச்சாட்டினைச் சுமத்தியுள்ளது.

அமெரிக்காவின் சமஷ்டி புலனாய்வுப் பணியகத்தினால் இவர் தேடப்பட்டு வருகின்றார். அவரது கைதுக்கு உதவுபவர்களுக்கு ஒரு மில்லியன் டொலர் சன்மானம் அறிவிக்கப்பட்டுள்ளது.

அல் - குவைதாவினால் வெளியிடப்படும் குறிப்பிட்ட வீடியோவை ஆராயப்போவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

# தொழிலதிபராக நேபாள மன்னர்?



காத்மாண்டு, ஜன.05

அரச பதவியிலிருந்து தூக்கியெறியப்பட்ட நேபாள மன்னர் ஞானேந்திரா தற்போது தொழில் தொடங்கி பலருக்கு வேலை வாய்ப்பை அளிக்க முடிவு செய்துள்ளார் எனத் தெரியவருகிறது.

தொழிலதிபராக பலருக்கு வேலை அளிக்கும் யோசனையை நேபாளத்தில் உள்ள கம்யூனிஸ்ட் பொதுச் செயலர் மாதவ் குமார் அரசரிடம் கூறியுள்ளார்.

அரசரிடம் நிதி வசதி ஏராளமாக உள்ளது. இதைக் கொண்டு தொழில் தொடங்கலாம் என ஆலோசனை கூறினார் என மாதவ் குமார் தெரிவித்தார். இதைச் செயற்படுத்தவதன் மூலம் நாட்டு மக்களுக்கு தனது தேசப்பற்றை மன்னர் வெளிப்படுத்த ஒரு வாய்ப்பு ஏற்படும் என்றும் கூறியுள்ளார்.

நீர் மின் நிலையத் திட்டத்தைத் தொடங்குமாறு மன்னரை அறிவுறுத்தியுள்ளதாக நேபாளத்திலிருந்து வெளியாகும் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

## பெனாஸிர் வேடத்தில் ஷபானா



மும்பை, ஜன.05

பெனாஸிர் பூட்டோவின் வாழ்க்கை வரலாற்றை மையமாகக் கொண்டு எடுக்கப்படவுள்ள திரைப்படத்தில் பெனாஸிர் வேடத்தில் பிரபல ஹிந்தி நடிகை ஷபானா ஆஸ்மி நடிக்கவுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானைச் சேர்ந்த மேடை நாடக இயக்குநர் தாரிக் அலி, இத் திரைப்படத்தை இயக்குகிறார்.

இது குறித்து ஷபானா ஆஸ்மி கூறுகையில், ''இருமுறை பெனாஸிரை சந்தித்துள்ளேன். கொலம்பியா பல்கலைக்கழகத்தில் நான் சிறப்புரை ஆற்றியபோது அவர் வந்திருந்தார். அரசியலில் எனது அனுபவங்களைப் பற்றி அவர் கேட்டறிந்தார். அவரது வேடத்தில் நடிப்பதை பெருமையாக நினைக்கிறேன்.'' - என்றார்.

பெனாஸிர் வரலாற்றைப் படமாக்க தாரிக் முன்பே முடிவு செய்திருந்தார் என்றும் அதற்கு பெனாஸிர் குடும்பத்தாரின் அனுமதியும் பெறப்பட்டது என்றும் தயாரிப்புக் குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடமாகாணத்தில் பொதுச்சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர் வெற்றிடங்கள் 123

குருநகர்,ஜன.5

வட மாகாணத்தில் செயற்பட்டு வரும் பிராந்திய சுகாதாரசேவைப் பணிப்பாளர் அலுவலகங்களில் 123 பொதுச்சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள் உள்ளன.

வடமாகாண சுகாதாரப் பணிமனையின் புள்ளிவிவரம் மூலம் இத்தகவல் தெரிய வந்துள்ளது.

வடமாகாணத்தில் பொதுச்சுகாதார வெளிக்கள உத்தியோகத்தருக்கு அங்கீகரிக்கப்பட்ட ஆளணிகள் 145 உள்ளன. ஆனால் தற்போது 22 பேர் மட்டுமே பணியாற்றுகின்றார்கள்.

வவுனியா பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் பிரிவில் 20 பேர் தேவையாக உள்ளபோதிலும் 3 பேரே தற்போது பணியாற்றுகின்றனர்.

மன்னார் பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் பிரிவில் 20 பேர் தேவையாக உள்ளபோதிலும் 4 பேரும் - கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் பிரிவில் 27 பேர் தேவையாக உள்ளபோதிலும் 3 பேரும் - பணியாற்றுகின்றனர்.

முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் பிரிவில் 27 பேர் தேவையாக உள்ளபோதிலும் 4 பேரும் - யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் பிரிவில் 51 பேர் தேவையாக உள்ளபோதும் 8 பேருமே தற்போது சேவையில் உள்ளனர்- எனவும் இப்புள்ளிவிவரங்கள் மூலம் தெரியவந்துள்ளது. (202-51)

# இந்து ஆலயங்களுக்கு சிமெந்து விநியோகம்

யாழ்ப்பாணம்,ஜன.5

குடாநாட்டிலுள்ள இந்து ஆலயங்களுக்கு யாழ்.இந்து சமயப் பேரவை சிமெந்து விநியோகிக்கவுள்ளது.

ஆலயங்களில் கட்டடப் பணிகள் மேற்கொள்ளும் - சிமெந்து தேவையான ஆலய நிர்வாகிகளைப் பதிவுசெய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது.

சிமெந்துத் தேவையை முறையாக உறுதிப்படுத்தி எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு பேரவையின் தலைவர் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் கேட்டுள்ளார். (202)

# கல்வி நிர்வாக சேவைக்கான போட்டிப் பரீட்சையின் முடிவுகள் பரீட்சைத் திணைக்களத்தால் வெளியீடு

அச்சுவேலி,ஜன.5

இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் -III இற்கு ஆள்களை சேர்த்துக்கொள்வதற்கு நடத்தப்பட்ட திறந்த போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகள் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் கல்வி அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் உயர்புள்ளி பெற்றவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படவுள்ளனர். திறந்த போட்டிப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் 250இற்கும் அதிகமானோர் இலங்கை கல்வி நிர்வாக சேவையில் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர்.

நேர்முகப்பரீட்சைகளை நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. கடந்த வருடம் முற்பகுதியில் கல்வி நிர்வாக சேவைக்கான திறந்த போட்டிப் பரீட்சை நடைபெற்றது.

நிறுவனம்சார் நிலையில் நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் முடிவுகள் தனிப்பட்ட முறையில் பரீட்சார்த்திகளுக்கு அனுப்பிவைக்குமாறு கல்வி அமைச்சு அறிவுறுத்தினால் மட்டுமே தனிப்பட்ட முறையில் பரீட்சை முடிவுகளை அனுப்பிவைக்கமுடியும் எனப் பரீட்சைத் திணைக்களத்தினர் தெரிவித்தனர். (202-11)

## டிப்ளோமா மாணவர்களுக்கு

தேசிய கல்வி நிறுவகத்தினால் நடத்தப்பட்ட டிப்ளோமா கற்கைநெறியை பூர்த்திசெய்த அனைவரையும் இன்று முற்பகல் 10 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரிக்கு சமூகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (202)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# நயினாதீவு தெற்கில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் கையளிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.5

நியாப் - II திட்டத்தின்கீழ் நயினாதீவு தெற்கில் மேற்கொள்ளப்பட்ட மைய கிராம அபிவிருத்தித் திட்டங்கள் பூர்த்திசெய்யப்பட்டு பொதுமக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

கையளிப்பு வைபவம் நேற்றுமுன்தினம் வேலணைப் பிரதேச சபைச் செயலர் கை.மகேந்திரலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

நயினாதீவு தெற்கில் இத்திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்யப்பட்ட கற்புலம் வீதி, பிரண்டைப்புலம் வீதி, பிடாரி அம்மன் வீதி, வங்காளவடி வீதி என்பவற்றைக் கையளிப்பதற்கான சான்றிதழை உள்ளூராட்சி திணைக்கள வேலை அத்தியட்சகர் சி.யசிதரன், வேலணை பிரதேச சபை செயலாளர் கை.மகேந்திரலிங்கத்திடம் கையளித்தார்.

நயினாதீவு தெற்கு மலையடி குடிநீர்த் திட்டத்தை நயினாதீவு உப அலுவலக பொறுப்பதிகாரி ந.மோகனரூபனிடம் கையளித்தனர்.

இந்நிகழ்கில் வேலணை பிரதேச செயலக திட்டமிடல் அதிகாரி திருமதி ரி.மீரா, வேலணை பிரதேச சபை சிரேஷ்ட தொழில்நுட்ப அதிகாரி ம.குணானந்தசுதன், நியாப் திட்ட சமூக வலுவூட்டாளர் திருமதி நா.சிறிரங்கா, நயினாதீவு மாதர் சங்கத் தலைவி திருமதி ம.சத்தியேஸ்வரி, வேலணை பிரதேசசபை உள்ளூராட்சி உதவியாளர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இதேவேளை -

15 லட்சம் ரூபா செலவில் நான்கு வீதி புனரமைப்பும் ஒரு குடிநீர் கிணறு அபிவிருத்தியும் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (202-95)

# 'ரெலிக்கொம்'மின் சுன்னாகம் பிராந்திய நிலையத்தின் பணிகள் ஆரம்பம்

வலி.வடக்கு,ஜன.5

சுன்னாகத்தில் அமைக்கப்பட்டுள்ள 'ரெலிக்கொம்'மின் பிராந்திய நிலையத்தின் மூலம் இணைப்புகள் வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த 3 வருடங்களுக்கு முன்னர் இந்த நிலையத்திலிருந்து இணைப்புகளை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு இடைநிறுத்தப்பட்டமை தெரிந்ததே.

தற்போது இப்பணி ஆரம்பிக்கப்பட்டு சீராகச் செயற்படுத்தப்படுகின்றன.

முதற்கட்டமாகக் காங்கேசன்துறை வீதி, சுன்னாகம் - புன்னாலைக்கட்டுவன் வீதி ஆகியவற்றில் இணைப்புகளைப் பொருத்துவற்கு வசதியாகக் கம்பங்கள் நாட்டுதல் மற்றும் நிலத்தின்கீழ் குழாய்கள் பொருத்துதல் போன்ற பணிகள் ஆரம்பமாகியுள்ளன.

இப்பணி முடிவடைந்ததும் சுன்னாகம், சண்டிலிப்பாய், தெல்லிப்பழை, புன்னாலைக்கட்டுவன் உட்பட மற்றும் பல பகுதிகளுக்கும் இணைப்புகள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை 'சிடிஎம்ஏ' இணைப்புகள் கிராமப்புறங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படவுள்ளதாகவும் கேபிள் இணைப் புகள் உள்ள நகரப் பகுதிகளுக்கு வழங்கப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்பட்டபோதிலும் 'சிடிஎம்ஏ' இணைப்புகளில் பல நூற்றுக்கணக்கானவை நகரப்புறங்களிலும் வழங்கப்பட்டுள்ளன எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது. (202-86)

# நெற்பயிர்கள் பன்றிகளால் அழிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.5

மட்டுவில் பகுதியில் செய்கை பண்ணப்பட்டுள்ள நெற்பயிர்கள் பன்றிகளால் அழிக்கப்படுவதாக அப்பகுதி நெற்செய்கையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

நெல்வயல்களை பாதுகாக்க இரவு வேளைகளில் வயல்களில் தங்குவற்கு பாஸ் எடுக்க வேண்டுமென்பதால் இதற்கு எவரும் முன்வருவதில்லை. இதனால் நெற்பயிர்களை தினமும் பன்றிகள் அழித்து வருவதாகவும் தெரிவித்தனர்.

பிரதேசத்தின் நெற்பயிர்களைக் கட்டாக்காலி கால்நடைகளிடமிருந்து பாதுகாக்க முட்கம்பி வேலிகள் அமைக்கப்பட்டுள்ளபோதிலும் மட்டுவில் சுதந்திரபுரம் பகுதி நெல் வயல்களுக்கு முள்வேலி அமைக்க முட்கம்பி வழங்கப்படவில்லையெனவும் தெரிவித்தனர்.

இதேவேளை -

பண்டத்தரிப்பு, மாதகல், சில்லாலை ஆகிய பகுதிகளில் வயல் காணிகளில் விளைந்த நெற்கதிர்களை கொக்கு, கிளி, மைனா மற்றும் குருவிகள் கொத்தித் தின்று வருவதாக விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர். இப்பகுதிகளில் பயிரிடப்பட்ட மூன்றரை மாத கால விளைச்சலையுடைய நெற்பயிர்களில் தற்போது கதிர்வந்த நிலையில் உள்ளன. இக்கதிர்களை மேற்படி பறவைகள் கூட்டம் கூட்டமாக வந்து கொத்தித் தின்று வருவதால் விவசாயிகள் வயல்களில் காவல் காத்து வருகின்றனர். (202-207-135)

## முன்பள்ளிகளுக்கு சுகாதாரப் பொருள்கள்

குருநகர்,ஜன.5

'போரூட்' நிறுவனத்தின் யாழ்.மாவட்டப் பிரிவினர் முன்பள்ளிகளுக்கு பற்தூரிகைகள், பற்பசைகள் மற்றும் முதலுதவிப் பெட்டிகளை வழங்கியுள்ளனர்.

முன்பள்ளிகளில் கற்கும் 17ஆயிரம் பிள்ளைகளுக்கு பற்தூரிகைகள் மற்றும் பற்பசைகள் வாழங்கப்பட்டுள்ளதுடன் இந்த முன்பள்ளிகளுக்கு மருந்துகளுடன் 625 முதலுதவிப் பெட்டிகளும் வழங்கியுள்ளதாக நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர். (202-51)



பிரதேச செயலகங்களுக்கிடையில் நடைபெற்ற யாழ்.மாவட்ட முகாமைத்துவப் போட்டியில் இரண்டாமிடம் பெற்ற உடுவில் பிரதேச செயலகத்தின் செயலரையும் அனைத்து அலுவலர் களையும் பாராட்டும் விழா அண்மையில் சுன்னாகம் பொது நூலகத்தில் சுன்னாகம் பல நோ. கூ.சங்கத் தலைவர் சி.குமாரவேல் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் சமூக சேவையாளரும் சத்தியப்பிரமாண மொழிபெயர்ப்பாளருமான சபா.புஷ்பநாதன் பாராட்டுரை வழங்குவதைப் படத்தில் காணலாம். பிரதேச செயலர் செல்வி மஞ்சுளாதேவி தனபாலன், நிர்வாக அதிகாரி ஆர்.ஜெயப்பிரகாசம் உட்பட யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவர் எம்.தேவராஜா உட்பட ஏனைய பிரமுகர்களும் படத்தில் காணப்படுகின்றனர்.

# கிராமத்தின் அபிவிருத்திக்கும் சேவையாற்றும் பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம்

## வலிகாமம் வலயப் பணிப்பாளர் பாராட்டு



வலி.தென்மேற்கு,ஜன.5

மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு மட்டுமல்லாது தான் சார்ந்த கிராமத்தின் சமூக, சமய, ஆன்மீக பொருளாதார முன்னேற்றத்திற்கும் சேவையாற்றி வருகின்றது பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம். இவ்வாறு பாராட்டுத் தெரிவித்துள்ளார் வலிகாமம் கல்வி வலயப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன்.

வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா கடந்த திங்கட்கிழமை வித்தியாலய அதிபர் வே.சிவசுந்தரம் தலைமையில் நடைபெற்றது. அதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

தரமான கல்விச் சமூகம் ஒன்றை உருவாக்கும் பெரும் பொறுப்பு பாடசாலைகளிடமே உள்ளது. சிறந்த எதிர்கால நற்பிரஜைகளையும் சிறந்த தலைவர்களையும் உருவாக்கும் பொறுப்பும் பாடசாலைகளிடமே உள்ளது. மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்கு மட்டுமன்றி விளையாட்டு, கலை, கலாசாரம் மற்றும் ஆன்மீகத் துறைகளிலும் அவர்களை ஈடுபடுத்தி ஆளுமையுடையவர்களாக உருவாக்குவதற்கு பாடுபட்ட முன்னைய அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோரையும் இந்த நூற்றாண்டு நிறைவு விழாவில் நாம் நினைவு கூரவேண்டும். பெற்றோர்களும், இக்கிராம மக்களும், பழைய மாணவர்களும், நலன்விரும்பிகளும் பாடசாலை அபிவிருத்திக்கு தொண்டாற்றி வருவதையும் பாராட்டாமல் இருக்க முடியாது - என்றார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட வலிகாமம் மற்றும் தென்மராட்சி கல்வி வலயங்களின் ஓய்வுபெற்ற கல்விப்பணிப்பாளர் திருமதி றெயினா இருதயநாதன் உரையாற்றுகையில்-

பல்வேறு அழிவுகளுக்கும் மத்தியில் இன்று கல்வி ஒன்றுதான் மிகுதியாகவுள்ளது. எமது மக்கள் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து வருபவர்கள். கல்வியால் கலாசாரமும் மொழியறிவும் மனிதநேயமும் எமது சமுதாயத்தினருக்கு ஏற்படுகின்றது.

ஒரு நிறுவனத்தின் தலைமை கண்டிப்புடன் செயற்படும்போதுதான் அந்த நிறுவனம் சிறப்பாக செயற்படமுடியும் தலைமைத்துவமானது இறுக்கமுள்ளதாக செயற்பட வேண்டும் - என்றார்.

நூற்றாண்டு விழா மலரை வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் வெளியிட்டு வைக்க வெளியீட்டுரையை கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆசிரியர் பா.மகாலிங்கசிவம் நிகழ்த்தினார். (202-135)

## சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கு புதிய அதிபர் நியமனம்

குருநகர்,ஜன.5

யாழ்.சென் பற்றிக்ஸ் கல்லூரியின் புதிய அதிபராக வண.பிதா மனுவல்பிள்ளை ஜெறோ செல்வநாயகம் அடிகளார் கடந்த 2ஆம் திகதி தனது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

கல்லூரியின் புதிய கல்வியாண்டுக்கான ஆரம்ப நிகழ்வுகள் யாழ்.மரியன்னை பேராலயத்தில் அன்றைய தினம் காலை 8.30 மணிக்கு யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் நடைபெற்றபோது இக்கல்லூரியின் புதிய அதிபராக வண. பிதா ம.ஜெறோசெல்வநாயகம் அடிகளாரை யாழ்.ஆயர் நியமனம் செய்தார்.

இந்நிகழ்வில் இக்கல்லூரியின் அதிபராக இதுவரை காலமும் சேவைபுரிந்த யாழ். மாவட்ட குருமுதல்வராக யாழ்.ஆயரால் நியமனம் செய்யப்பட்ட வண.பிதா ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார், சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், இக்கல்லூரியின் மாணவர்கள், ஆசிரியர்கள், புதிதாக மாணவர்களைச் சேர்ப்பதற்காக வருமை தந்திருந்த பெற்றோர்கள் மற்றும் புதிய மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (202-51)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழாச் சி

## அருளாசிச் செய்தி



யாழ்ப்பாணம் வலயக்கல்விப் பணிப்பாளர் உயர்திரு.வே.தி. செல்வரத்தினம் அவர்கள் இன்று மணிவிழாக் காண்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். யாழ்ப்பாணப் பாரம்பரியம் கல்விப் பாரம்பரியம் கல்வி வளர்ச்சிக்கு அயராது பணியாற்றியவர்களில் செல்வரத்தினமும் ஒருவராவர். வலயக்கல்விப் பணிப்பாளரும் யாழ்ப்பாண மேலதிக மாகாணக்கல்விப்பணிப்பாளருமாகப் பணியாற்றிய செல்வரத்தினம் எடுத்த செயலை செவ்வனே ஆற்றும் திறமைசாலியும் எல்லோருடனும் இனிமையாகப் பழகும் சுபாவமும் எளிமையான தோற்றமும் கொண்டவர். இவருடைய பணியினால் கல்விச் சமூகம் தனக்கென ஒரு இடத்தை வகுத்துக் கொண்டது. பல நெருக்கடிகளுக்கு மத்தியிலும் கல்விப்பணியாற்றிய செல்வரத்தினம் பல ஆண்டுகள் வாழ்ந்து சுகதேகியாக இருந்து சமய சமூகப் பணியாற்ற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். இவரைக் கௌரவித்து விழா எடுக்கும் மணிவிழாக் குழுவினரை இறைவன் ஆசீர்வதிப்பாராக.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

இரண்டாவது குரு மஹா சந்நிதானம், ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்.

## முகாமையின் இலக்கணம்



வடமராட்சி, யாழ்.வலயங்களில் கல்விச் சேவையாற்றி அகவை அறுபது காணும் யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளரும் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளருமாகிய வே.தி.செல்வரத்தினம் அவர்களுக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

வே.தி.செல்வரத்தினம் ஆசிரியராக, அதிபராக, உதவிக் கல்விப் பணிப்பாளராக, பிரதிக்கல்விப் பணிப்பாளராகப் பல படிகளேறிக் கல்விச் சேவையாற்றியுள்ளார். சுனாமிப் பேரலையால் வடமராட்சிப் பிரதேச கரையோரப் பாடசாலைகளும், மாண வர்கள், ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டபோது செல்வரத்தினம் தனது சொந்தப் பணத்தில் உடைகள், உணவுவகைகளைக் கொள்வனவு செய்து வழங்கி உதவினார். இக்காலப் பகுதியில் அவர் ஓய்வுறக்கமின்றி உழைத்தார். இதன் பின்னர் அவர் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளராகவும், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளராகவும் கடமையாற்றினார். 2006 ஆம் ஆண்டு குடாநாட்டு மாணவர்கள் நெருக்கடிக்குள்ளானபோது கல்விப் பணிகளைப் பலவழிகளில் முன்னெடுக்க உதவினார். அவரது கல்விச்சேவை என்றும் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படும். அகவை அறுபது காணும் அவர் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றேன்.

உயர்திரு க.கணேஷ்,
அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலர், யாழ்.மாவட்டம்.

## தலைமைக்கு ஓர் எடுத்துக்காட்டு



வே.தி.செல்வரத்தினம் அவர்கள் கல்வி உலகில் பிரகாசமாகத் திகழும் ஒரு சிறந்த கல்வி நிர்வாகி எனக் கூறினால் மிகையாகாது. எப்பொழுதும் புன்னகைக்கின்ற முகம், மனிதத் தன்மைக்கு அப்பாற்படும் குறிப்பிடத்தக்க அற்புதமான சிரிப்பு, அத்தகைய புன்னகைக்குள் ஆழமான மதிநலம் விஞ்சி நிற்கும் துடிப்பான நடை என்றும் போலியை நாடி வேஷம் போடாதவை. பெயருக்கேற்ற செல்வரத்தினம்தான். ஆனால் இது சாதாரண செல்வமல்ல. அறிவு மாத்திரமல்ல, அதிகாரத்தையும் சரியான படி பயன்படுத்த வேண்டுமென்ற விருப்பும் விடா முயற்சியும் கொண்ட ஒரு வெற்றியாளர் என்று கூறலாம். உழைப்புக்காக கடமைசெய்கின்றவர்கள் மத்தியில் உண்மைக்குக் கடமை செய்து உயர்ந்து நிற்பவர் இவர். அத்தகைய உண்மையே இவருக்கு வளமாகவும் பிறருக்கு வழியாகவும் அமைந்தது. இவருடைய அறிவும், கடமையுணர்வும், செயல்திறனுமே அவரை மணிவிழா நாயகனாக ஆக்கியுள்ளது. "செயற்கரிய செய்வார் பெரியார்" அவர் தமது சேவைக் காலத்தில் குறிப்பாக வடமராட்சியிலும் பின் யாழ்ப்பாணத்திலும் செய்த அருட்பெரும் சேவைகள் ஊடாக இன்று "சேண்விளங்கும் புகழ்" கொண்டவராக விளங்குகின்றார். மணி விழா காணும் செல்வரத்தினம் அவர்களை வாழ்த்துவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். அவர் பல காலம் நீடூழி வாழ்ந்து மென் மேலும் சேவைகள் ஆற்ற மனமார்ந்த வாழ்த்துக்கள்.

- பேராசிரியர் மா.நடராஜசுந்தரம், ஆத்தியடி, பருத்தித்துறை.

## வடமாகாணக் கல்விப்பணிப்பாளரின் வாழ்த்து



05.01.2008 ஆம் திகதி 60 வயதினைப்பூர்த்தி செய்யும் மணிவிழா நாயகன் உயர்திரு.வே.தி. செல்வரத்தினம் அவர்களுக்கு வடமராட்சி கல்விச்சமூகம் விழா எடுப்பதனை அறிந்து பேருவகையடைகிறேன்.

யாழ்ப்பாண வலயம் பல சிறப்புத் தன்மைகளைக் கொண்ட கல்விப்பணிப்பாளர்களை வரலாற்று ரீதியில் கொண்டிருக்கிறது. இக்கல்விப் பணிப்பாளர்களின் அர்ப்பணிப்பான சேவைகளால் யாழ். வலயம் பெருமையடைந்துள்ளது. இத்தகைய கல்விப் பணிப்பாளர்களில் இன்றைய மணிவிழா நாயகனும் இடம்பெற்றுள்ளார். இவரது பணிப்பாளர் பணி வடமராட்சி வலயத்தில் தொடங்கி யாழ்.வலயம்வரை பரிணமித்து யாழ்.மாவட்டத்திற்கே மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளராக வியாபித்திருக்கும் வேளையில் மணிவிழா நாயகனாகின்றார். இவ்விரு வலயங்களிலும் பிரபலம் வாய்ந்த பல கல்விப்பணிப்பாளர்கள் சேவை நல்கிய போதிலும் கூட தீர்க்கப்படாத பிரச்சினைகள் இன்றும் புரையோடியுள்ளன. கடும் முயற்சி எடுத்தாவது இப்பிரச்சினைகள் களையப்பட்டு ஆரோக்கியம் ஏற்படுத்தப்படல் வேண்டும் என்பதும் முக்கியமான விடயமாகும்.

1992 இல் இருந்து மணிவிழா நாயகனை நிர்வாக ரீதியாக நன்கறிவேன். தாபன விடயங்கள் கணித, விஞ்ஞான எண்ணக்கருக்களில் ஞானமுள்ளவர். எடுத்த விடயத்தை விரைவாக செய்து முடிக்கும் சிறப்பாற்றல் கொண்டவர். இன்றைய வித்தியாசமான காலகட்டத்தில் பல்வேறு துன்பங்களையும் சந்தித்து மாகாணத்தின் வழிகாட்டலின்படி பல விடயங்களை நிர்வாக ரீதியாக முன்னெடுத்து வரும் சிறப்புமிக்க பணியாளர் மணிவிழா நாயகனை வாழ்த்துவதோடு விழா எடுப்பாளர்களையும் பாராட்டுகிறேன்.

வீ.இராசையா,
மாகாணக் கல்விப்பணிப்பாளர், வடமாகாணம்.

## அர்ப்பணிப்புடன் செயற்பட்ட கல்விப்பணிப்பாளர்



இன்று மணிவிழாக்காணும் யாழ்.மாவட்ட மேலதிக கல்விப்பணிப்பாளரும் யாழ்.வலயக்கல்விப்பணிப்பாளருமாகிய வே.தி.செல்வரத்தினம் அவர்களைப் பாராட்டி வாழ்த்துகிறேன். இவர் கல்விப் பணிக்கெனத் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டவர். நல்லாசானாகவும் ஆளுமைமிக்க அதிகாரியாகவும் செயற்பட்டவர்.

கல்வி நிர்வாகப் பணிகளையும் கல்வி அபிவிருத்திப்பணிகளையும் சமவலுவுடன் நிறைவேற்றியவர். செயன்முறை மூலம் விஞ்ஞானம் கற்பிக்கப்படவேண்டும் என்ற உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்டவர். கஷ்டப்பிரதேச பாடசாலைகளின் அபிவிருத்தியில் கண்ணும் கருத்துமாக இருந்தவர். சுனாமியால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களினதும் மாணவர்களினதும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக உடனடியாக களத்தில் இறங்கி அளப்பரிய சேவை ஆற்றியுள்ளார். மிகவும் இக்கட்டான கால கட்டங்களில் துணிவுடன் செயற்பட்டார். கடின போக்குடையவர் போல் தோன்றிய போதும் அவரிடம் கனிவும் காணப்பட்டது. பல்லாண்டு நலத்துடன் வாழ்ந்து கல்வி உலகிற்கு மேலும் சேவையாற்றுவதற்கு இறையருள் கிட்ட வேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன்.

செல்வி.தி.பெரியதம்பி,
முன்னாள் மாகாணக் கல்விப்பணிப்பாளர், வடக்கு - கிழக்கு மாகாணம்

## கரவெட்டிப் பிரதேச செயலரின் வாழ்த்து



இன்று அகவை அறுபதினை அடையும் மேலதிக மாகாணக்கல்விப்பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் அவர்களின் மணிவிழாச் சிறப்பு மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன். தனது அர்ப்பணிப்பு மிக்க சேவையினால் பல நன் மாணவர்களை உருவாக்கி சிறந்த வழிகாட்டல், தலைமைத்துவம் என்பவற்றினை வழங்கி உயர்ந்த கல்விச்சமூகம் உருவாக வழி சமைத்துள்ளார். இவரின் ஆங்கிலப் புலமையும் சிறந்த முகாமைத்துவப் பண்புகளும் ஆளுமைமிக்க நிர்வாகியாக இவரை இனங்காட்டின. இவரின் சேவையினைப் பாராட்டுவதுடன் இன்[illegible]ம் நீண்ட காலம் வாழ்ந்து கல்விச் சமூகத்திற்கு பணியாற்ற எல்லாம் வல்ல இறைவன் நீண்ட ஆயுளை வழங்க வே[illegible]டுமென பிரார்த்திக்கிறேன்.

சி.சத்தியசீலன், பிரதேச செயலர், பிரதேச செயலகம், கரவெட்டி.


## மருதங்கேணி உதவி அரச அதிபரின் வாழ்த்து



யாழ்ப்பாண வலயக்கல்விப் பணிப்பாளரும் மேலதிக மாகணக் கல்விப்பணிப்பாளருமாக கடமையாற்றுகின்ற உயர்திரு.வே.தி. செல்வரத்தினம் அவர்களின் மணிவிழாவில் வாழ்த்துத் தெரிவிப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். வடமராட்சியில் அவரது கல்வி நிர்வாக அலகிற்குள் அடங்கும் வடமராட்சி கிழக்குக் கல்விக் கோட்டத்தின் செயற்பாடுகளில் அவர் காட்டிய தனிப்பட்ட அக்கறை காரணமாக இன்று பலர் பல்கலைக்கழகங்களில் கல்வி கற்று வருகிறார்கள். அவர் கடமையாற்றிக் கொண்டிருந்த காலத்திலேயே எமது உதவி அரசாங்க அதிபர் பிரிவும் சுனாமிப் பேரலையால் தாக்கப்பட்டிருந்தது. அவ்வேளையில் அல்லலுற்று ஏதிலிகளாக இழப்புக்களுடன் இடம்பெயர்ந்த மக்களுக்கு தமதுஅலுவலகத்தினை உடனடியாக வழங்கி அவர்களிற்கு ஆறுதலாக இருந்தார். அவர் கடமையாற்றிய காலப்பகுதியில் நான் உதவி அரசாங்க அதிபராகக் கடமையாற்றா விடினும் வரலாறு அவரின் செயற்கரிய செயல்களை எனக்கு எடுத்தியம்புவதால் மணிவிழா நாயகனை மனம்திறந்து மனதாரப் பாராட்டி எல்லாச் சிறப்புகளும் பெற்று உய்ய வேண்டுமென வாழ்த்துகிறேன்.

மா.ஸ்ரீஸ்கந்தகுமார், உதவி அரசாங்க அதிபர், மருதங்கேணி

## One of the most Outstanding Directors



It is my privilege and pleasure to send this message of felicitation to my valued collegemate friend and Head of Institution Mr. V.T.Selvaratnam for his Diamond Jubilee. Mr .V.T.Selvaratnam as the Director of Education is one of the most outstanding Directors of Education. He assumed office at the Zonal Education Office, Jaffna, at a crucial and difficult time. The courage and leadership qualities he exhibited during the critical period as the Additional Provincial Director of Education,Jaffna District, coupled with the command of all three languages,is highly commendable. It has been a remarkable achievement of our director who under most trying conditions kept Jaffna Zone which is the centre place among all the other Zonal Education Offices stand supreme and smooth with his unique administrative capabilities. It must be put on record that he made the best of use of all opportunities given to produce the best possible results in both curricular and co- curricular activities and the results of public Ex ams of students in Jaffna Zone bear ample testimony to my claim.

Happily I offer him, my warmest greeting on the occasion of his Diamond Jubilee and pray to Almighty God to bless him with good health to continue his services in both the educational social spheres to the benefit of our community.

T. Arunagirirajah, Deputy Director of Education (Planning), Zonal Education Office, Jaffna




| | |
|---|---|
| பிறப்பு | : வல்வெட்டி - 1948.01.05 |
| முழுப்பெயர் | : திருப்பதி செல்வரத்தினம் |
| ஆரம்பக்கல்வி | : யா/ வல்வெட்டி அ.மி.த.க.பாடசாலை |
| இடைநிலைக்கல்வி | : யா/ உடுப்பிட்டி அ.மி.கல்லூரி |
| உயர்தரக் கல்வி | : யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி<br>அக்குவைனாஸ் பல்கலைக்கல்லூரி, கொழும்பு. |
| கல்வித் தகைமை | : கலைப்பட்டதாரி, பயிற்றப்பட்ட விஞ்ஞானம்,<br>கல்வி டிப்ளோமா |
| ஆசிரியத் தொழில்: | சிலா/ மாதம்பை முஸ்லிம் வித்தியாலயம்<br>சிலா/ உடப்பு தமிழ் மகா வித்தியாலயம்<br>க/ வஹாகோட்டை முஸ்லிம் வித்தியாலயம்<br>யா/ சிதம்பராக் கல்லூரி |
| கொத்தணி அதிபராக : | யா/ உடுப்பிட்டி அ.மி.கல்லூரி |
| உதவிக் கல்விப் பணிப்பாளர் | : வடமராட்சி கல்விக்கோட்டம் |
| கோட்டக் கல்வி அலுவலர் | : பருத்தித்துறைக் கல்விக் கோட்டம் |
| பிரதிக் கல்விப்பணிப்பாளர் | : வடமராட்சி கல்வி வலயம் |
| வலயக் கல்விப்பணிப்பாளர் | : வடமராட்சி கல்வி வலயம்,<br>யாழ்ப்பாணக் கல்வி வலயம் |
| மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் : | யாழ்.மாவட்டம். |

## கல்வி முகாமையின் கலங்கல

யாழ்ப்பாண மாவட்டத்தின் மேலதிக மாகாணக் கல்விப்பணி
கல்விப்பணிப்பாளராகவும் சேவையாற்றி அறுபதாம் அகவை
செல்வரத்தினம் அவர்களுக்கு வாழ்த்துரை வழங்குவதில் மட்டில்லா
கல்விப் புலத்தில் இவர் பல்வேறு பதவிகளை ஏற்றுச் செவ்வனே
சிதம்பராக் கல்லூரியின் வளமிகு விஞ்ஞான ஆசானாக உடுப்பிட்
அதிபராக இவர் ஆற்றிய சேவைகள் காலத்தால் அழியாதவை. வடம
பள்ளிக் கூடங்களும் மாணவர்களும் ஆசிரியர்களும் பாதிக்கப்பட்
கொணர இவர் ஆற்றிய பணி பராட்டிற்குரியது. இவ்வகையில்
இலக்கியமாக வும் இவர் மிளிர்ந்தார். கல்விப்புலத்தில் இவரது ப
காணும் உயர்திரு.வே.தி. செல்வரத்தினம் பல்லாண்டு காலம் வாழ

வ.செல்வராசா, வலயக்கல்விப்பணிப்பாளர், வடமர

## தீவகக் கல்விச் சமூக



கல்விப்புலத்தில் வி.ரி. என நாம் அன்பாக அழை
இரு தசாப்தங்களுக்கு மேலாக உறவுகளைக்
விரைவான சரியான தீர்மானங்கள் அவற்றை நடை
பாட சாலைகளின் மீதான மதிப்பு சிறிய பாடசாலை
பாடசாலைகள் குறிப்பாகத் தீவகக் கல்விவலயப் ப
எனக்கருதும் விடயங்களை எந்தச்சபையிலும் த
புகழ்மொழிகள் மற்றும் எதிர்பார்ப்புக்களுடன் கூடிய மாலை மரியா
இயல்பு, தான் அன்பு வைத்தோரிடம் இறுதிவரை ஆழமான நட்பை
தொடர்பான எனது மனப்பதிவுகள். கல்விப்புலத்தில் அவர் கடமை
வோ அர்ப்பணிப்புக்களுக்கு மத்தியிலேயே இப்பணியை ஆற்றி வரு
இணைந்த பாடசாலைகள் மிகச்சிறப்பாக இயங்குகின்றமை இ
எடுத்துக் காட்டுக்களாகும். இன்று மணிவிழாக்காணும் நாயகனைப் ப
தும் பல நல்ல உள்ளங்களுடன் நானும் எனது குடும்பத்தவரும் தீவ

ஆ.இராஜேந்திரன், வலயக

## வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பா

அன்பும் பண்பும் நிறைந்த திருப்பதி செல்வரத்தினம் அவர்களி
னிட்டு வெளிவரும் சிறப்பு மலருடாக வாழ்த்துத் தெரிவிப்பதில் பேரு
யராக,அதிபராக, பிரதிக்கல்விப்பணிப்பாளராக கல்விப்பணிப்பளரா
யாற்றியுள்ளார். சமய நம்பிக்கையும் இறை பக்தியும் கொண்ட இவர்
டித்து மற்றவர்களுக்கு முன்மாதிரியாகத் திகழ்பவர். இலங்கை கல்வி
யப்பட்ட நாள்முதல் அறிமுகமான இவருடன் பல் கூட்டங்களில் கல
ஒன்றாக திருகோணமலைக்கு பிரயாணம் மேற்கொண்டுள்ளேன். அ
யாக அமைந்திருப்பதை அவதானித்துள்ளேன். இவர் நீடூழி காலம்
பிரார்த்திக்கின்றோம்.

ப.விக்னேஸ்வர

## அகவை அறுபது க



முன்னணிப்பாடசாலைகள் பலவற்றையும் என்
யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் கல்விப் பணிப்பாளரா
பங்களிப்பை நல்கிய மதிப்புக்குரிய உயர்திரு.வே.தி.
ஆழ்ந்த அறிவும் ஆளுமையும் கொண்டவர். இதன் காரண
கடமைகளையும் பொறுப்புக்களையும் ஏற்றுச் சிறந்
திகழ்பவர். பரீட்சைத்திணைக்களம், மாகாணக்கல்வி
செயலகம் என்பவற்றுடனும் குடாநாட்டில் ஏனைய
களைப் பேணி வருபவர். ஏனைய வலயங்களுக்குத்
விரைவாக வழங்கிச் சிறந்த இணைப்பாளராகவும் செயற்படுபவர். க
செவ்வனே ஆற்ற வேண்டுமென்பதில் உறுதிப்பாடுடையவராகவும் வி
அறுபதை எய்தி மணிவிழாக் காண்பது சிறப்புக்குரியது. இவர் தொடர்
பணிகள் பல ஆற்றி மன மகிழ்வும் பொருள் வளமும் பெற்று பல்லாண்டு

திருமதி அ.வேதநாயகம், வலயக் கல்வ

விழாச் சிறப்புற வா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ச் சிறப்பு மலர்




## யாழ்.கல்வி வலயங்களினது முழுப்பார்வையும் கொண்டவர்



புகழ் பூத்த யாழ்.கல்வி வலயத்தின் கல்விப் பணிப்பாளர் வி.ரி செல்வரத்தினம் அவர்கள் தனது 60 ஆவது அகவையில் தடம் பதிக்கும் தருணத்தில் ஆசிச் செய்தி வழுங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

வடமராட்சி,யாழ்பாணம் ஆகிய இரு வலயங்களிலும் கல்விப் பணிப்பாளராகவும் கடந்த இரண்டு வருடங்களாக மேலதிக மாகாணக் கல்வி பணிப்பாளராகவும் இருந்து கல்விப் புலத்திற்கு இவர் ஆற்றிய அரும்பணிகள் பாராட்டப்பட வேண்டியவை. அறிவும் ஆற்றலும் இறை சிந்தனையும் கொண்ட எம் கல்விப்பணிப்பாளர் எம் உள்ளங்களிலே அழியா இடத்தைப் பெற்றுள்ளார்.

யாழ்.கல்வி வலயத்தின் முழுப் பார்வையையும் ஆழமாகவும் அகலமாகவும் அறிந்து கொண்டவர். கடமையில் கண்டிப்பிருக்கும். ஆனால் அது கருணையின் மறுவடிவம். கடமைஉணர்வு மிக்க நடுநிலையானவர். நேர்மை நிர்வாகி, உயர்ந்த லட்சியவாதி. தொடரும் இவரின் வாழ்வுப்பயணததில் இறைவன் தாமே கூடவே பயணிக்கவும் தன் ஆசிர்வாதங்களால் நிறைக்கவும் நீண்ட ஆயுளை வழங்கவும் இறைவனை இறைஞ்சுகின்றேன்.

Revd.Dr.Justin R.Gnanapragasam- Vicar General, Bishop's House.

## கல்விச் சமூகத்தின் ஓர் கலங்கரை விளக்கு



மணி விழாக் காணும் எங்கள் அன்பிற்கும், பெருமதிப்பிற்கும் உரிய கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் ஐயா அவர்களை வாழ்த்துவதில் பெருமையும் பெருமகிழ்ச்சியும் அடைகின்றேம். கல்விதான் தமிழ் மக்களின் தலையாய சொத்து. வளம் எதுவுமில்லா இந்த வறண்ட யாழ். மண்ணில் கல்விதான் எங்கள் பரம்பரை சீதனம். அந்தப் பாரம்பரியத்தில் யாழ்.மாவட்டத்தில் கல்வித்துறையின் வளர்ச்சிக்காக ஆசிரியராய், அதிபராய், கல்விப் பணிப்பாளராய் பல்வேறு பரிமாணங்களில் அவர் ஆற்றி சேவைகளை இவ்வேளையில் நன்றியுடன் நினைவு கூருகின்றோம்.

நெருக்கடிகள், இன்னல்கள் நிறைந்த ஒரு காலப் பகுதியில் யாழ்.மாவட்ட கல்விச் சமூகத்தை வழிநடத்திச் சென்ற தனிப் பெருமை அவருக்குண்டு. சரித்திரம் நிச்சயமாய் சான்று கூறும். கல்வியும், ஆரோக்கியமும் ஒரு சமூகத்தின் இரண்டு கண்கள். சுவர் இருந்தால் தான் சித்திரம் வரைய முடியும். பாடசாலை மாணவர்கள் ஆரோக்கியமாக இருந்தால் தான் கல்வியைச் சிறப்பாக உள்வாங்க முடியும். அந்த அடிப்படையில் யாழ்.மாவட்டத்தில் பாடசாலை சுகாதார சேவைகளைச் சிறப்பாக முன்னெடுக்க அவரும், ஏனைய கல்விப் பணிப் பாளர்களும் சுகாதாரத் திணைக்களத்திற்கு வழங்கிய ஒத்துழைப்பையும் இச் சந்தர்ப்பத்தில் நன்றியுடன் நினைவு கூருகின்றோம். உங்களுக்கு இது முடிவுரை அல்ல. இந்தச் சமூகத்தின் கல்வி வளர்ச்சிக்கு நீங்கள் ஆற்ற வேண்டிய பணிகள் பல உண்டு. வயது ஒரு வரம்பல்ல. பதவி மட்டும் ஒரு பாதையல்ல. உங்கள் பணிகள் மேலும் தொடர வாழ்த்துகின்றேன்.

வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், யாழ்ப்பாணம்.

## கல்வி வள்ளலார்

அன்பும் அறமும் அதிசயிக்கும் ஆற்றல்களும்
சென்னி வியக்கும் சேவையின் சிகரமதாய்
கன்னித் தமிழை காக்கும் சேவைக் கோவே
மன்னுமித் தாணி போற்றச் சேவையால் நீடு வாழி

விஞ்ஞான வாஞ்சையதும் செயன்முறை இலக்குகளும்
விஞ்சி நிற்கும் பக்திநெறி விண்டுரைக்கும் தமிழறிவும்
அஞ்சாது நிமிர்ந்து நிற்க ஆங்கிலத்தில் புலமையதும்
மஞ்சள் அலங்கரித்தாற் போல் மாண்புடனே நீடு வாழி

அவையில் முழக்கமும் அஞ்சா நெஞ்சமும்
எவரையும் கவரும் வஞ்சமில்லாப் பேச்சும்
இவைகளை விஞ்சும் எளிமையில் நாட்டமும்
சுவை பல கொண்ட விருட்சமாய் வளர்ந்து வாழி

இதயத்தால் வாழ்த்தும்:
அதிபர்கள், ஆசிரியர்கள்,
வடமராட்சி கல்வி வலயம்.

...லல
...கொழும்பு.
...ந்தானம்.
...லயம்
...லயம்
...தியாலயம்
...ம்
...ட்டம்
...ம்

## தமிழ்த்துறைத் தலைவரின் வாழ்த்து



கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் அவர்களுக்கு அகவை அறுபதாயிற்று என்று என் தம்பி அனைய நண்பர் பொன்னையா கண்டு கூறினார். அட, செல்வரத்தினத்திற்கும் அகவை அறுபதாயிற்றா? உண்மையில் ஆச்சரியமாகவே இருந்தது. சுறுசுறுப்பாகவும் துடிப்பாகவும் ஒரு இளைஞன்போலப் பணியாற்றும் செல்வரத்தினமும் எங்கள் பட்டியலில் சேர்ந்துவிட்டார். செல்வரத்தினத்தோடு நன்கு பழகியிருக்கின்றேன். பல விழாக்களிலும் கூட்டங்களிலும் அவரோடு பங்குபற்றி இருக்கிறேன். ஆழமாகவும், நிதானமாகவும் தான் சொல்ல நினைப்பவற்றை ஒழுங்குபடுத்திப்பேசும் அவரது ஆற்றலைக் கண்டு மகிழ்ந்திருக்கிறேன். இலங்கையிலே குறிப்பாக யாழ்ப்பாணத்திலே கல்வித்துறையில் அதிகாரியாகப் பணியாற்றுவதென்பது அவ்வளவு இலகுவான காரியம் அல்ல. அப்படி இருந்தும் கடினமான இப் பணியைக் கண்ணியமாகவும் திறம்படவும் செய்யும் ஆற்றல் செல்வரத் தினத்திற்குக் கைவரப் பெற்றிருந்தது. ஆசிரியர்கள், அதிபர்கள் பலரோடு எனக்கு நெருக்கமான உறவுண்டு. அவர்களிற் பலர் கல்விப் பணிப்பாளர் செல்வரத்தினத்தைப் பாராட்டியதைக் கேட்டிருக்கிறேன். போலித்தனம், நடிப்பு, அதிகார மமதை முதலானவை கிஞ்சித்தும் இல்லாது தனது பணியைத் திறம்படச் செய்யும் இவரது ஆளுமையைக் கண்டும் இருக்கிறேன். கேட்டும் இருக்கிறேன். உயர்திரு செல்வரத்தினம் அவர்கள் நல்ல உடல் நலத்தோடு இன்னும் இன்னும் உயர்க என்று வாழ்த்துகிறேன். அவரது மணிவிழா சிறப்புற எனது பாராட்டுக்கள்.

பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, தலைவர், தமிழ்த்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

## ...ர் கலங்கரை விளக்கு



...ணக் கல்விப்பணிப்பாளராகவும் யாழ்.வலயக்
...பதாம் அகவையடையும் உயர்திரு.வே.தி.
...துவதில் மட்டில்லா மகிழ்ச்சியடைகிறேன்.
...ற்றுச் செவ்வனே பணியாற்றியுள்ளார். வல்வை
...னாக உடுப்பிட்டி அ.மி.கல்லூரியின் ஏற்றமிகு
...ரியாதவை. வடமராட்சியில் ஆழிப்பேரலையால்
...நம் பாதிக்கப்பட்ட போது கல்வி நடவடிக்கைகளை வழமைக்கு
... இவ்வகையில் இடர் முகாமைத்துவத்தின் இலக்கணமாகவும்,
...த்தில் இவரது பணிகள் என்றும் நிலைத்திருக்கும். மணி விழாக்
...டு காலம் வாழ வாழ்த்துகின்றேன்.
...பாளர், வடமராட்சி கல்வி வலயம்.

## கடமை உணர்வு மிக்க கல்விப் பணிப்பாளர்



கல்விப்புலத்தில் 35 வருடங்களுக்கு மேல் பணியாற்றி ஓய்வு பெறவுள்ள கல்விப்பணிப்பாளர் வே.தி. செல்வரத்தினம் அவர்களின் சேவைகளை நயந்து வெளிவரும் இம்மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

வே.தி.செல்வரத்தினம் அவர்கள் ஆசிரியராகத் தனது பணியை ஆரம்பித்து அதிபராகவும், கல்வி அதிகாரியாகவும், கோட்டக் கல்வி அதிகாரியாகவும் உயர்சி பெற்று இறுதியாக யாழ். வலயக்கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி ஓய்வு பெறவுள்ளார். இது இவரது கடமையுணர்விற்கும் விசுவாசத்திற்கும் கிடைத்த பெறுமதி மிக்க பரிசாகும். எமது மாணவச் செல்வங்களை அறிவு மிக்க மாணவ நற்பிரஜைகளாக வளர்த்தெடுக்க வேண்டும் என்பதில் நம்பிக்கை கொண்டவர். அதற்காக தன்னலம் பாராது உழைத்தவர். அதில் ஓரளவு வெற்றியும் கண்டுள்ளார். யாழ். மாவட்டத்தில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையிலும் இவர் கல்விப்பணிப்பாளர் பொறுப்பையேற்று கல்விச் செயற்பாடுகள் சோர்வடையாது முன்னெடுத்துச் சென்றவர். குடும்பம், உறவுகள் என்ற இறுக்கமான கட்டுப்பாடுகளுக்கப்பால் நின்று கல்விப்பணியை இறைபணியாகக் கருதிச்செயற்பட்ட ஒரு பெருந்தகை. இத்தகைய ஒருவர் ஓய்வு பெறுவது எமது கல்வித்துறைக்கு பேரிழப்பாகும். கல்விப்பணி ஒரு சமூகப்பணி வருங்கால சமுதாயத் தளிர்களை வளர்த்தெடுக்கும் பொறுப்பு மிக்க செயற்பாடு. இதில் பங்காளியாவோர் அனைவரும் பாக்கிய சாலிகள். அந்த வகையில் செல்வரத்தினம் அவர்கள் மன நிறைவுடன் ஓய்வு பெறுகின்றார்.

இவரது ஓய்வுக்காலம் மகிழ்ச்சிகரமாக அமைய வேண்டும் என்றும் குடும்ப உறவுகளுடன் சுகதேகியாக வாழ்ந்து மனநிறைவு பெற வேண்டும் என்றும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

இ.சிவானந்தன்,
முன்னாள் மாகாணக் கல்விப் பணிப்பாளர், வடக்கு - கிழக்கு மாகாணம்

## ...விச் சமூகத்தினரின் வாழ்த்து

...ம் அன்பாக அழைக்கும் செல்வரத்தினம் ஐயா அவர்களுடன் நான்
... உறவுகளைக் கொண்டிருந்தேன். சிறப்பான நேரமுகாமை,
...ர் அவற்றை நடைமுறைப்படுத்தலில் காட்டுகின்ற உறுதி, பெரிய
...றிய பாடசாலைகளை கைதூக்கி விடும் பண்பு பின்தங்கிய பிரதேச
... கல்விவலயப் பாடசாலைகளின் மீதான அதீதஅக்கறை, நியாயம்
...ச்சபையிலும் தயக்கமின்றி முன்வைக்கும் இயல்பு, பொய்யான
...ய மாலை மரியாதைகள் அறுசுவை விருந்துகளைப் புறந்தள்ளும்
...ழமான நட்பை வெளிப்படுத்தும் உயரிய பண்பு - இவையே வி.ரி.
... அவர் கடமை வீரனாக வலம் வருகின்றார் எனில் - அவர் எவ்வள
...யை ஆற்றி வருகின்றார். இன்று யாழ். கல்வி வலயம் அதனுடன்
...துகின்றமை இவரின் வினைத்திறன் மிக்க செயற்பாடுகளுக்கு
...ம் நாயகனைப் பல்சிறப்பும் பெற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்
...ம்பத்தவரும் தீவக கல்விச் சமூகமும் இணைந்த கொள்கின்றோம்.
...திரன், வலயக்கல்விப்பணிப்பாளர், தீவகக் கல்விவலயம்.

## கடமை வீரர் உயர்திரு வே.தி.செல்வரத்தினம்



மணிவிழா க் காணும் நாயகன் உயர்திரு தி.வே.தி செல்வரத்தினம் அவர்களுடன் கல்வி நிர்வாக சேவைப் பரீட்சையில் சித்தியடைந்து யாழ். உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்வி அதிபராகக் கடமையாற்றிய காலத்திருந்து இன்றுவரை மிகவும் நெருக்கமாகவும் அன்புடைய நண்பராகவும் பழகி வருகின்றோம். நல்லாசிரியனாகத் தனது பணியைத் தொடங்கி அதிபராக, உதவிக் கல்விப் பணிப்பாளராக, கோட்டக்கல்வி அதிகாரியாக, பிரதிக் கல்விப் பணிப்பாளராக, வலயக்கல்விப்பணிப்பாளராக, மேலதிக கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றி 2008-01-05 இல் இளைப்பாறுகிறார். மேற்படி பதவிகளுக்குப் பெருமை சேர்த்தார். கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் செயற்பட்டார். கொடுக்கப்பட்ட பணியை சிறப்பாகவும் உரிய காலத்தில் செய்து முடிக்கும் ஆற்றலும் திறமையும் கொண்டவர். 1998 இல் யாழ்.மாவட்டம் ஐந்து வலயங்களாகப் பிரிக்கப்பட்டு நான் வடமராட்சி கல்வி வலயத்திற்கு கல்விப்பணிப்பாளராகவும் செல்வா அவர்கள் பிரதிக்கல்விப் பணிப்பாளராகவும் (நிர்வாகம்) நியமனம் பெற்றோம். இவர் என்னுடன் பணிபுரிந்த காலத்தில் கடமை தவறாமை, மெய் வருத்தம் பாராமை, பயன் எதிர்பாராமல் நேர்மையாகவும் கடினமாகவும் பணிபுரிந்தவர். செல்வா அவர்கள் இறைபக்தி மிகுந்தவர். பல நோன்புகளை அனுஷ்டிப்பவர். ஆனால் அதற்காக தன்னுடைய கடமையை ஒருபோதும் உதாசினம் செய்ததில்லை. பாடசாலைகளை மேற்பார்வை செய்த பின்னரும் வீடு செல்லாது அலுவலகத்திற்கு வந்து தனது நாளாந்தப் பணியில் ஈடுபடுவார்.

2008-01-05 இல் அகவை அறுபதில் இளைப்பாறும் செல்வா அவர்கள் தனது குடும்பத்தாருடன் பல்லாண்டு காலம் இனிமையாக வாழ வாழ்த்துகின்றேன்.

சி.சிவராஜா, முன்னாள் மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர்.

## ...பணிப்பாளரின் வாழ்த்து



...தினம் அவர்களின் மணிவிழா நிகழ்வினை முன்
...விப்பதில் பேருவகையடைகிறேன். இவர் ஆசிரி
...ப்பணிப்பளாராக கல்வி உலகிற்கு பெரும் பணி
...கொண்ட இவர் முறையாக விரதங்களை அனுஷ்
...லங்கை கல்வி நிர்வாக சேவையில் தெரிவு செய்
...டங்களில் கலந்து கொண்டுள்ளேன். அத்துடன் பல தடவைகள்
...டுள்ளேன். அக்கூட்டங்களில் இவரது கருததுக்கள் வலுவானவை
... நீடூழி காலம் பல்வேறு சிறப்புகள் பெற்று வாழ இறைவனைப்
...திக்கேஸ்வரன், வலயக் கல்விப்பணிப்பாளர், வலிகாமம்

## பருத்தித்துறைப் பிரதேச செயலரின் வாழ்த்து



அறுபதாவது அகவை மணி விழா நாயகன் மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளர் உயர்திரு.வே.தி. செல்வரத்தினம் அவர்களுக்கு வாழ்த்துரை வழங்குவதில் பேருவகை அடைகின்றேன்.

வடமராட்சி மண்ணின் மைந்தன் , கல்வியின் பெரு விருட்சம் உயர்திரு .வே.தி. செல்வரத்தினம் அவர்கள் மிக நீண்ட காலம் கல்வியின் வளர்ச்சிக்காகவே உழைத்த பெருமகன். ஆசிரியராக, அதிபராக, கோட்டக்கல்விப் பணிப்பாளராக, வலயக் கல்விப் பணியாளராகப் படிப்படியாக உயர்ந்து இன்று மேலதிகக் கல்விப் பணிப்பாளராக சிறப்பாகச் சேவையாற்றியவர். அபாரமான ஞாபகத்திறனும் மும்மொழிகளையும் சரளமாக பயன்படுத்தும் திறமையும் அவருடைய சிறப்பான சேவைக்கு கட்டியம் கூறுவனவாக இருந்தன. ஆற்றல், அறிவு, அனுபவம், திறன் யாவும் ஒருங்கே அமைந்த மணிவிழா நாயகன் அரச சேவையிலிருந்து இளைப்பாறினாலும் கல்விசசேவையை எவ்வகையிலும் தொடர வேண்டும் என்பதே எனது பேரவா.

இ.வரதீஸ்வரன், பிரதேச செயலர், பருத்தித்துறை.

## ...பது கண்டு வாழ்க வளமுடன்

...றையும் எண்ணிக்கையில் அதிகளவு மாணவர்களையும் கொண்ட
...ப் பணிப்பாளராக இருந்துபிரதேசத்தின் கல்வி அபிவிருத்திக்கு பெரும்
...யர்திரு.வே.தி. செல்வரத்தினம் அவர்கள் கல்வி நிர்வாகத்துறையில்
...ர். இதன் காரணமாக மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பளாருக்குரிய
... ஏற்றுச் சிறந்த முறையில் செயற்படுகின்ற சிறப்பையும் பெற்றுத்
...காணக்கல்வி அமைச்சு, மாகாணக்கல்வித்திணைக்களம் மாவட்டச்
...டில் ஏனைய கல்விவலயங்களுடனும் சிறந்த முறையில் தொடர்பு
...யங்களுக்குத் தேவைப்படுகின்ற தகவல்களையும் உரிய வகையில்
...ற்படுபவர். கண்டிப்பு மிக்க நிர்வாகியாகவும் உரிய கடமைகளைச்
...வராகவும் விளங்குபவர். இத்தகைய சிறப்புப் பெற்ற இவர் அகவை
...இவர் தொடர்ந்து வரும் காலங்களிலும் கல்வி உலகில் மென்மேலும்
...று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகிறேன்.
... வலயக் கல்விப்பணிப்பாளர், தென்மராட்சி கல்வி வலயம்.

## மனிதரில் மாணிக்கம்



இன்று மணிவிழாக்காணும் நாயகன் உயர்திரு.வே.தி. செல்வரத்தினம் அவர்கள் மாணவர்களால் விரும்பப்பட்ட நல்ல விஞ்ஞான ஆசிரியராக, போர் அனர்த்தத்தால் முற்றாகச் சிதைவடைந்த பாடசாலையை மீளக் கட்டியெழுப்பத் துடிப்புடன் செயற்பட்ட நல்ல அதிபராக மிகவும் இக்கட்டான சூழ்நிலைகளிலும் வடமராட்சி மாணவர்கள் உச்சப்பயன்பாட்டை அடையுமுகமாக கல்விச்செயற்பாடுகள் திறம்பட நடைபெற வேண்டும் என்பதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட கல்வி அதிகாரியாக மாணவர்கள் சிறந்த கல்வியைப் பெற வேண்டுமானால் ஆசியர்கள் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டு அவர்களின் சுயவிபரங்களை அறிந்த பிரச்சினைகளை இனங்கண்டு அதற்கான பரிகாரங்களைத் தேடிய கல்விப்பணிப்பாளராக சுனாமி அனர்த்தத்தின் பின் உடனடியாகச் செயற்பட்டு பாதிக்கப்பட்ட ஆசிரியர்களை நேரில் சென்று சந்தித்து வேண்டிய உதவிகள் புரிந்த மனிதநேயம் மிக்க பண்பாளனாக என்று பல பரிணாமங்களில் 36 ஆண்டுகள் கல்விச் சேவையாற்றியுள்ளார். அவரின் கல்விப்பணி மேலும் தொடர எல்லா நலன்களும் அவருக்குக் கிடைக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

வ.கணேசமூர்த்தி, தலைவர், அதிபர் நலன்புரிச்சங்கம், பருத்தித்துறைக் கோட்டம்.

...ற வாழ்துவோர்: வடமராட்சி கல்விச் சமூகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது ஆசிரியை
திருமதி கௌரி சண்முகலிங்கன்
அவர்களின் துணைவர்
**பேராசிரியர் நாகலிங்கம் சண்முகலிங்கன்**
அவர்கள் யாழ்.பல்கலைக்கழகத்தின்
துணைவேந்தராகப் பதவி உயர்வு
பெற்றமையையிட்டு எமது கல்லூரிச் சமூகம்
பெருமையடைவதுடன் யாழ்.பல்கலைக்கழகம் சகல
துறைகளிலும் வளர்ச்சி காண
உளமார வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை.

(சி/55026)



## இதய அஞ்சலிகள்



### அமரர் தியாகராசா மகேஸ்வரன்

[கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர், இந்து கலாசார அலுவல்கள் முன்னாள் அமைச்சர், காரைநகர் அறப்பணிநிலைய நிறுவுநர்]

காரை மண் தந்த புதல்வன் நீ என்
கல்லூரி அன்னைக்கு அணிகலன்கள் பல தந்தாய்!
கல்லூரி பாண்ட் வாத்திய இசைக்கருவிகள்
விளையாட்டு மைதான புனரமைப்பு மட்டுமன்றி
விளையாட்டு உபகரணங்கள் நிறையத் தந்தாய்!
ஓட்டோ எமது கல்லூரியில் உன்பெயர் சொல்கிறது
அனுராதபுரம் சிகிரியா கல்விச் சுற்றுலாவை
உனது செலவில் எமது பிள்ளைகள் கண்டு களித்தனர்
மாணவர்களுக்கு மட்டுமன்றி ஆசிரியர்களுக்கும்
அறப்பணி நிலையத்திலிருந்து மதிய உணவு தந்தாய்!
GTZ, நிக்கொட் போன்ற நிறுவனங்கள்
பெரிய மாடிக் கட்டடங்கள் அமைக்க வழி வகுத்தாய்!
தேசியப் பாடசாலையாக தரமுயர்த்த எண்ணினாய்
இன்னும் என்ன என்னவெல்லாம் எண்ணியிருந்தாய்!
உன்எண்ணம் எல்லாம் நிறைவேறுமுன்
காலனவன் கவர்ந்து சென்றானோ?
எமது இதயத்தில் உமது குரல்
ஒலித்துக் கொண்டிருக்கின்றது
கல்லூரியில் நீ தந்த தொலைபேசி
ஒலித்துக்கொண்டிருக்கிறது.

உனது ஆத்மா சாந்திபெற எல்லாம் வல்ல ஈழத்துச் சிதம்பர
சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமானை
வேண்டி நிற்கிறோம்.

கலாநிதி ஆ.தியாகராசா
மத்திய மகாவித்தியாலயம்
காரைநகர். (சி/55032)

பழைய மாணவர் சங்கமும்,
பாடசாலைச் சமூகமும்.



## புதிய பிரிவுகள் ஆரம்பம்

**aat (srilanka)**

Foundation level, Intermediate level & Final
ஆரம்பம்: 06.01.2008(Saturday) 8.00am
Medium: English & Tamil
வழமையான விரிவுரைகள் அனைத்தும் 06.01.2008 முதல் நடைபெறும்

External Pharmacist Examination - 2008
மேற்படி பரீட்சைக்கான வகுப்புகள் ஆரம்பம்: 07.01.2008 (sunday)

Further Details
Director
Jaffna College Undergraduate Dept
464, Hospital Road,
(Near Commercial Bank)
Jaffna.



## JAFFNA COLLEGE INSTITUTE OF AGRICULTURE

DIPLOMA IN AGRICULTURE

**விவசாய டிப்ளோமா பயிற்சி நெறி**

ஒரு வருட கால விவசாய டிப்ளோமா பயிற்சி நெறிக்கு க.பொ.த.சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடைந்த 17-25 வயதுக்கிடைப்பட்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**போதிக்கப்படும் பாடங்கள்:**
விவசாய மூலதத்துவம், பயிரியல், பூங்கனியியல், மிருகபரிபாலனம் பண்ணை முகாமைத்துவம், கமபொறியியல் (ஆண்கள்), மனைப் பொருளியல் (பெண்கள்), ஆங்கிலம்

**இப்பயிற்சி நெறியில் சேர விரும்புவோர்**
11.01.2008 வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு எமது நிறுவனத்தில் நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்கு பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், கல்வித் தகைமைப் பத்திரங்கள், கிராம சேவையாளரின் நற்சான்றிதழ், வேறு இருவரின் நற்சான்றிதழ்களுடன் சமூகமளிக்கவும்

*பயிற்சிநெறிக் காலத்தில் உதவுதொகை வழங்கப்படுவதுடன் பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.*

மேலதிக விவரங்களுக்கு:
அதிபர்,
யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்,
மருதனார்மடம், சுன்னாகம். (69670)


## மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்,ஜன.5

கச்சாய் பிரதேச மக்களுக்கான இலவச மருத்துவ முகாம் நாளை ஞாயிற்றுக் கிழமை கச்சாய் அ.த.க.பாடசாலையில் நடத்தப்படவுள்ளது.

தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தினரால் நடத்தப்படவுள்ள இம்முகாமில் கண், பல், இரத்த அழுத்தம், சர்மவியாதி, இரத்தம், பொதுமருத்துவம் ஆகிய பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும்.

கண் பரிசோதனையில் பார்வையில் குறைபாடு காணப்படும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படுமென கழகச் செயலாளர் லயன் கா.இராசதுரை தெரிவித்தார்.

(202-207)


### இறைச்சிக்கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
நல்லூர் பாம் சென்றர்,
19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (69553)

### அடிப்படைக் கணனிக்கல்வி

For Grade 6,7,8 and 9 students
முற்றுமுழுதான Practical வசதிகளுடன் கணனி உலகின் அடிப்படைகள் அடங்கிய பாடநெறி.
பொற்பதி வீதி கொக்குவில் கிழக்கு
T.P.0602216083 By R.Kumaran-B.Sc. (69562)

### தவறிவிட்டது

செல்லையா மகேந்திரன் என்பவருடைய தே. அ. அட்டை (5917 52790V), விசே. அ.அட்டை (090403383) என்பன கொக்குவிலுக்கும் ஏழாலைக்கும் இடையில் 2.11.2007 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் சாடியடி, ஏழாலை மேற்கு, ஏழாலை எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (69711)

### வீடு விற்பனைக்கு

இருபாலைச் சந்திக்கும், கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கும் இடைப்பட்ட உச்சு வீதியில் நல்ல அமைதியான சூழலில் அமைந்துள்ள 4 பரப்பு காணியுடன் கூடிய 30 ஆம் இலக்க வீடு விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:
செல்லப்பா கனகரத்தினம்,
நற்பன்பிள்ளையார் கோயிலடி, உடுப்பிட்டி. (69708)

### தவறிவிட்டது

சிறுப்பிட்டி மேற்கு நீர்வேலி என்னும் முகவரியைச் சேர்ந்த செல்லத்துரை சிவசுப்பிரமணியம் என்பவரது மோட்டார் சைக்கிள் (NPGS 3890)BOXER ஆவணங்கள் 31.12.2007 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் சுவிஸ் மிரைல் இல.231, கோயில் வீதி, நல்லூர் எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
**தொலைபேசி இல: 021 2228182**

### Organ/Violin Notes

Organ, வயலின், guitar, வீணை, புல்லாங்குழல் போன்ற இசைக்கருவிகளுக்கான, 250 சினிமாப் பாடல்களின் இசைக்குறிப்புகள், கேள்வி ஞானம், Organ Exercise, Theory, ஆகியன விற்பனைக்குண்டு. புதிய வகுப்புகள் பிரதி சனிக்கிழமைதோறும் ஆரம்பமாகும்.
கரவீணா இசைமன்றம்,
131, கோயில் வீதி, நல்லூர். T. P:- 07130 55991, 0777031293 [நல்லூர் ஆலயத்திலிருந்து 500 மீற்றர் தெற்கே]


## மாணவர்களுக்கு அன்பளிப்பு

நவாலி,ஜன.5

திருவெம்பாவை உற்சவ காலத்தில் ஆனைக்கோட்டை கரைப்பிரான் ஆலயத்திலிருந்து அப்பகுதிவீதிகள்தோறும் அதிகாலையில் திருவெம்பாவை பாடல்களைப் பாடிவந்த 39பாடசாலை மாணவர்களுக்கு அவ்வாலய பிரதம குரு சிவஸ்ரீ.சோமசிவகுமார் குருக்கள் பாடசாலை உபகரணங்களை வழங்கிக் கௌரவித்துள்ளார்.

(202-100)

## அதிபர் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.5

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(1-270)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



வேம்படி மகளிர் கல்லூரியில் இருந்து க.பொ.த (உயர்தர) பரீட்சையில் தோற்றி விஞ்ஞான பிரிவில் யாழ்.மாவட்டத்தில் 4ஆவது இடத்தையும், நாடளாவிய ரீதியில் 53 ஆவது இடத்தையும், 3A சித்திகளை அடைந்த தென்னிந்தியத் திருச்சபை யாழ்.திருமண்டலத்தின் குருவானவரும் கிறிஸ்தவ இறையியல் கல்லூரியின் தற்போதைய நிர்வாகப் பொறுப்பாளரும், விரைவில் அதிபர் பொறுப்பை ஏற்க இருப்பவருமான

**வண.பிதா பென்ஜமின் ஜெயராஜா** அடிகளாரின்
கனிஷ்ட புதல்வியான
செல்வி
**இவான்ஜலின் மிர்னாலினி ஜெயராஜா**
அவர்களைதிருச்சபை சமூகம் பாராட்டி வாழ்த்துவதில்
பெருமிதமடைகின்றது.

பேராயர், குருமார்,
மற்றும் அங்கத்தவர்கள்.



## நீங்காத நினைவுகளுடன் இரண்டாம் ஆண்டில்...



அரியாலையில்
பிறந்துபொலிகண்டியில்
சிவப்பேறுபெற்ற
அமரர் கலாபூஷணம்
**கந்தையா பாலசிங்கம்**
(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

அன்னை மடியில்
05.08.1931
இறைவன் அடியில்
05.01.2006

திதி: பூர்வபக்க ஷஷ்டி 14.01.2008

காலத்தை வென்ற காவிய நாயகனே
காலனும் கவர்ந்து ஈராண்டாயிற்றே
நாடு போற்றும் நல்லாசானாய் சமூகம் போற்றும் தலைமகனாய்
வீடு போற்றும் இல்லத்தலைவனாய் - தந்தையாய் பாசமிகு பேரனாய்
உறவுகள் போற்றும் தோழனாய் நல்லதோர் நண்பனாய்
எல்லா வாழ்வும் சிறப்புற வாழ்ந்த எங்கள் ஐயாவே!
பூலோகக் கடமை முடித்து சிவலோகக் கடமையேற்ற
ஈராண்டு நினைவு நாளில் எங்கள் குலதெய்வமே!

*உங்கள் ஆத்ம ஈடேற்றத்திற்காக எல்லாம் வல்ல*
*கொட்டுக் கிணற்றடி விநாயகனை வேண்டிப்*
*பணிந்து வணங்கிப் பிரார்த்திக்கின்றோம்.*

செந்தில்பதி,
பொலிகண்டி மேற்கு,வல்வெட்டித்துறை.
தகவல்:- பா.பிரபாகரன். (சி/55017)

என்றும் உங்கள் நீங்கா
நினைவுகளுடன்
குடும்பத்தினர்.



## ஈரவிழிகளுடன் இரண்டாம் வருட நினைவஞ்சலி



செல்வி
**கோமதர்சினி பரமேஸ்வரன்**
(சிந்து)
[யா/ சிவப்பிரகாச மகா வித்தியாலய
2007 உயர்தர கலைப்பிரிவு மாணவி]

அவதாரமாக
05*10*1988

ஆகுதியாக
05*01*2006

ஆழ்கடலில் மூக்குளித்து பெற்றெடுத்த முத்து - நீ
படைக்கத் தெரிந்தவனுக்குப் பறிக்கத் தெரிந்ததுவோ!
இது சரியா! இது முறையா! முளையிலே
உமைப் பறித்து எடுத்து விட்டான் - கடவுள்
சிட்டாக சிறகை விரிக்கும் காலமதில் நீ சிறகிழந்ததேனோ!
உன்னுடைய தேர்வின் முடிவுகளை கண்டுமகிழ்ந்திருக்கும் நேரமதில்
வெந்தணலில் வேகின்றோம்.
நீரை நம்பி மீன் இருப்பது போல் உனை நம்பி நாம் இருந்தோம்
நித்தம் நித்தம் அழவைத்துவிட்டு எங்கே அம்மா சென்றாய்!
ஆறு நான்கு மாதங்கள் சென்றாலும் - ஆறாத்துயருடன்
மீளாத்துயில் கொண்ட உனக்கு - எமது கண்ணீர்த் துளிகளைக் காணிக்கை
ஆக்குகின்றோம். *ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!*

நி.முகவரி: நகுலேஸ்வரா வீதி, கீரிமலை.
த.முகவரி. இந்துக்கல்லூரி வீதி,
வாலியடைப்பு, பண்ணாகம்.

உன்பிரிவால் துயருறும்!
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# சர்வதேசத்தையே உதாசீனப்படுத்தும் பௌத்த - சிங்கள மேலாண்மைவாதம்

பேரழிவுகளில் சிக்கி அவலப்பட்டு, அல்லலுற்றுத் தவிக்கும் இலங்கைத் தீவின் மக்கள் தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற நப்பாசையுடன் காத்திருந்தனர். ஆனால் முழு அளவில் போர் வெடிப்பதற்கு வழி திறந்து விடப்பட்டிருப்பது பற்றிய அறிவிப்புடனேயே தை மகள் வந்திருக்கிறாள்.

தைப்பொங்கலின் போது புதுப்பானையில் புத்தரிசிப் பொங்கல் பொங்கும். அடுத்த நாள் ஆவினத்துக்கும் அதே பொங்கல். ஆனால் இலங்கைத் தீவைப் பொறுத்தவரை இம்முறை அதற்கு அடுத்தநாள் தொடக்கம் வேறு பொங்கலும் காத்திருக்கிறது. மாட்டுப் பொங்கலுக்கு அடுத்த நாள் தொடக்கம் இலங்கையில் பொங்கப் போவது போர்ப் பொங்கல். அது தினசரி தொடரப் போகின்றது என்பது பெரும்பாலும் நிச்சயமாகிவிட்டது.

பொங்கலை ஒட்டி வரும் மற்றொரு திருநாள் போகி. 'பழையன கழிதலும் புதியன புகுதலும்' போகிப் பண்டிகை உணர்த்தும் சிறப்பு. இலங்கைத் தீவைப் பொறுத்தவரை பழைய யுத்தமே மீண்டும் புதிய வடிவெடுத்து, அசுர உருக்கொண்டு, விஸ்வரூபம் எடுத்து, போகியோடு வரப்போகின்றது.

ஆறாண்டு கால யுத்தநிறுத்தம் வெறும் காகிதத்தில் சேடம் இழுத்துக் கொண்டிருக்க, அதை நிரந்தரமாகக் கிழித்துக் குப்பைக் கூடையில் போடத் தீர்மானித்து விட்டது மஹிந்தரின் அரசு.

''2005 நவம்பரில்-மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிப்பீடம் ஏறியவுடனேயே யுத்த நிறுத்த ஒப்பந்தம் குப்பைக் கூடைக்குள் போகும் என்று எதிர்பார்த்திருந்தேன். அதற்கு இவ்வளவு காலம் - சுமார் இரண்டாண்டுகளுக்கு மேல் - அவர் காத்திருந்தமை எதிர்பார்க்க முடியாத ஆச்சரியம் தான்.'' - என்று மஹிந்த ராஜபக்ஷ தலைமையின் போக்கை நன்கு நாடிபிடித்துப் பார்த்தறிந்துள்ள கொழும்பு இராஜதந்திரி ஒருவர் குறிப்பிட்டார்.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் இனித்தான் உத்தியோகபூர்வமாகச் செயலிழக்கப் போகின்றது என்பது உண்மைதான். ஆனால் அது நடைமுறையில் எப்போதோ செத்து விட்டது என்பதும் மறுபுறத்தில் உண்மையே.

நடைமுறையில் செயலிழந்து நடைப்பிணமாய்க் கிடந்த யுத்த நிறுத்த ஒப்பந்தத்துக்கு நிரந்தரமாகக் கதிமோட்சம் அளிப்பதற்கு பிணக்கில் சம்பந்தப்பட்ட இரு தரப்புகளுமே பின்நின்றன. யுத்த நிறுத்த உடன்பாட்டை மறு தரப்பு மீறி வருகின்றது என்ற குற்றச்சாட்டைக் கூறிக் காலத்தை இழுத்தடித்தும் வந்தனர் இரு சாராரும்.

யுத்த நிறுத்தத்தை முறிக்கிறோம் என்று அறிவித்து சர்வதேசத்தின் வயிற்றெரிச்சலை வாங்கிக்கட்ட இருதரப்புக்குமே விருப்பமில்லை.

ஆனால் கொழும்பு அரசு இப்போது அதற்குத் தயாராகி விட்டது. யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைச் செயலிழக்க வைத்து, அதன் காரணமாக சர்வதேச மட்டத்தில் எழும் எதிர்ப்பலைகளுக்கு முகம் கொடுக்க அது திடசங்கற்பம் கொண்டு விட்டது போலும்.

உள்ளூர் அரசியல் கள நிலைவரம் அத்தகைய அமிலச் சோதனையைச் செய்ய அரசுத் தலைமையை நெட்டித் தள்ளியிருக்கின்றது என்பதே உண்மையாகும்.

நாடாளுமன்றத்தில் உரிய பெரும்பான்மையுமின்றி -
புதிய பொதுத் தேர்தலைச் சந்தித்து, வெற்றியீட்டி, மீண்டும் அரசமைப்போம் என்ற நம்பிக்கை இல்லாத காரணத்தால் நாடாளுமன்றக் கலைப்புக்குத் திராணியுமின்றி -
அரசியல் குழப்பத்தில் சிக்கியிருக்கும் மஹிந்த அரசு, இருக்கின்ற நாடாளுமன்றத்தில் தன் வசம் உள்ள ஆசனங்களை வைத்துக்கொண்டு அரசை ஒருவாறு கொண்டிழுக்கப் படாதபாடு படுகின்றது. இருக்கின்ற நாடாளுமன்றத்தில் ஆட்சியைத் தன் கையில் தொடர்ந்து தக்கவைப்பதே அதன் ஒரே இலக்கு; நோக்கம்; எத்தனம் எல்லாம்.

அதற்காக நாடாளுமன்றத்தில் கணிசமான ஆசனங்களைக் கொண்டிருக்கும் ஜே.வி.பியை தன் கைக்குள் போட்டுக்கொள்ள ஏதோவெல்லாம் செய்கிறது அது.

பௌத்த - சிங்களப் பேரினவாதத்தில் மூழ்கி, சிறுபான்மைத் தமிழருக்கு எதிரான மேலாதிக்க மமதையில் திமிர்கொண்டு நிற்கிறது ஜே.வி.பி. சமாளித்து, அதைத் தன்கைக்குள் போட்டுக் கொள்வதற்காக ஜே.வி.பி. இழுத்த இழுப்புக்கெல்லாம் அரசு இழுபடுகின்றது. ஜே. வி . பியின் இசைக்கு ஏற்ப அது ஆடுகின்றது.

சர்வதேச சமூகத்தை ஒட்டுமொத்தமாகப் பகைத்துக் கொண்டால் கூடப் பரவாயில்லை, ஜே.வி.பி மற்றும் ஜாதிக ஹெல உறுமய போன்றவற்றைச் சமாளித்தால் சரி என்பதே மஹிந்தர் அரசின் தற்போதைய நிலைப்பாடு.

போர்த் தீவிரத்தில் குதிக்கத் தூண்டும் பேரினவாதக் கட்சிகள் ஒருபுறம் -

யுத்த வெற்றிகள் குறித்து கயிறுகளை விடும் படைத்துறை மற்றும் அதிகார வர்க்கம் மறுபுறம் -

போர் வெற்றி பற்றிய அறிவிப்புகளில் அவிந்து, அதற்காக அரசுத் தலைமையின் பக்கம் அணி திரள்வது போலக் காட்டிக் கொள்ளும் தென்னிலங்கை வாக்குவங்கி பிறிதொருபுறம் -

இப்படி இவற்றுக்கு மத்தியில் சிறைப்பட்டுக் கிடக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு தமிழ் மக்களின் பிரச்சினைகளை நேர்மையுடன் பேசித் தீர்க்கும் பக்குவமும், முற்போக்கான சிந்தனைத் தெளிவும், அரசியல் திடசித்தமும் அடியோடு இல்லை என்பதும் தெளிவு.

தமது அரசியல் அதிகாரத்தையும் செல்வாக்கையும் நிலைப்படுத்திப் பலப்படுத்துவதற்கான அதிகாரப் போர்களை சிங்கள ஆளும் வர்க்கங்கள் தமிழரின் இனப்பிரச்சினையை மையமாக வைத்தே காலங்காலமாக நடத்தி வந்திருக்கின்றன என்பது இலங்கையின் சரித்திரம்.

அந்த வரலாற்று ஓட்டத்தில் தாமும் சற்றும் பிசகாதவர் என்பதை நிரூபிக்கும் வகையில் அதனை உறுதிப்படுத்தி வருகின்றார் ஜனாதிபதி மஹிந்தர்.

சர்வதேச சமூகத்தை எதிர்த்துக்கொண்டும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைத் தூக்கிக் கடாசி, தென்னிலங்கை பௌத்த - சிங்களக் குழுமத்தைத் திருப்திப்படுத்த முயலும் தமது துணிகரம் மூலம் அதனையே மீண்டும் நிரூபிக்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணத்தில் நான்கு பாடசாலைகள் சிறந்த பெறுபேற்று சுட்டியைப் பெற்றுள்ளன

யாழ்ப்பாணம், ஜன.5

கடந்த ஓகஸ்ட் மாதம் நடை[illegible]ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் சிறந்த பெறுபேற்றுச் சுட்டியை யாழ். மாவட்டத்தில் நான்கு பாடசாலைகள் பெற்றுள்ளன.

அண்மையில் கல்வியமைச்சில் ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பெறுபேற்றுப் பகுப்பாய்வுச் செயலமர்வு நடைபெற்றது. கல்வியமைச்சர் தலைமையில் நடைபெற்ற இச் செயலமர்[illegible]டிய சுட்டியாக 79 புள்ளிகளைக் கல்கமுவ மாவட்டத்தைச் சேர்ந்த பாடசாலை பெற்றுள்ளது.

யாழ். மாவட்டத்தில் யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் 3 பாடசாலைகளும் வடமராட்சிக்கல்வி வலயத்தில் ஒரு பாடசாலையும் சிறந்த பெறுபேற்றுச் சுட்டியைப் பெற்றுள்ளன.

பெறுபேற்றுச்சுட்டி அட்டவணை வருமாறு:

| வலயம் | பாடசாலை | தோற்றியோர் தொகை | பத்திரம் 1 | பத்திரம்2 | பாடசாலைச் சுட்டி |
|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | யா/ சென்.ஜோன்ஸ் பொஸ்கோ | 218 | 68 | 70 | 69 |
| யாழ்ப்பாணம் | யா/ இந்து ஆரம்ப பாடசாலை | 236 | 68 | 66 | 67 |
| யாழ்ப்பாணம் | யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி | 69 | 65 | 67 | 66 |
| வடமராட்சி | யா/ கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம். | 44 | 68 | | 67 |

# கரவெட்டிக் கொள்ளையுடன் சம்பந்தப்பட்ட ஐவர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில்

பருத்தித்துறை, ஜன.5

கரவெட்டியில் நடைபெற்ற கொள்ளையுடன் சம்பந்தப்பட்டவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் ஐவர் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை நீதிமன்றின் உத்தரவின் பேரில் விளக்கமறி யலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கரவெட்டியிலுள்ள வீடொன்றில் பயங்கர ஆயுதங்களுடன் இரவு வேளை அத்துமீறி புகுந்து கொள்ளையிட முயற்சித்த சம்பவம் தொடர்பாகத் தேடப்பட்டு வந்த கொள்ளைக் கோஷ்டியைச் சேர்ந்த ஐந்து சந்தேக நபர்களும்பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

சம்பவ தினம் கொள்ளை முயற்சியில் ஈடுபட்ட கொள்ளைக் கோஷ்டியினர் அத்துமீறி வீட்டினுள் புகுந்தனர். அதன் போது வீட்டு உரிமையாளர் கூக்குரலிடவே கொள்ளைக் கோஷ்டியினர் ஓடித்தப்ப ஒருவர் மட்டும் மடக்கிப்பிடிக்கப்பட்டார். இவர் கொடுத்த தகவலின் அடிப்படையில் மற்றொருவர் பொலி ஸாரால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட கரவெட்டியைச் சேர்ந்த வல்லி மோகன் கேமவரதன், கேமதீபன் ஆகிய இரு சந்தேக நபர்களும் பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்டு ஏற்கனவே விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளனர். நீதிவானின் உத்தரவின் பேரில் தொடர் விசாரணைகளை மேற் கொண்ட பொலிஸார் மேலும் 5 சந்தேக நபர்களைக் கைது செய்தனர்.

நெல்லியடியைச் சேர்ந்த அருட்செல்வம் செல்வகுமார், சிவலிங்கம் அனுஷன், கந்தசாமி சுபாஸ்கரன், குணநாயகம் இந்துநேசன், சரவணை யோகராஜா ஆகிய 5 பேரும் பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதிவான் கே.அரியநாயகம் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டனர். இந்த ஐந்து சந்தேகநபர்களையும் விளக்கமறியலில் வைக்குமாறு அவர் உத்தரவிட்டார். (202-218)

## அபிவிருத்தி சங்கங்களைப் பதிவதற்கு ஏற்பாடு

வடமாகாண கிராமிய அபிவிருத்தி திணைக்களத்தில் இதுவரை பதிவு செய்யாத தென்மராட்சி பிரதேச கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஆகியவற்றிற்குப் பதிவு இலக்கங்களைப் பெற்றுக் கொடுக்க பிரதேச செயலக கிராம அபிவிருத்திப் பிரிவினர் ஏற்பாடு களை மேற்கொண்டுள்ளனர்

இதுவரை பதிவிற்கு விண்ணப் பிக்காத சங்கங்களின் பிரதிநிதிகள் பிரதேச செயலக கிராம அபிவிருத்தி அலுவலருடன் தொடர்பு கொள்ளுமாறு பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார்.

# சிவத்தமிழ்ச்செல்வி பிறந்தநாள்விழா

யாழ்ப்பாணம்,ஜன.5

சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் 83ஆவது பிறந்தநாள் அறக்கொடை விழாவை முன்னிட்டு 3 பணிகளுக்கு 4 லட்சத்து 50ஆயிரம் ரூபா அறக்கொடையாக வழங்கப்படவுள்ளது. பிறந்தநாள் அறக்கொடை விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு தெல்லிப்பழை துர்க்காதேவி யாத்திரிகர் விடுதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் வைத்தே அறக்கொடை நிதி வழங்கப்படவுள்ளது.

வலிகாமம் கல்வி வலய பாடசாலைகளின் சிரேஷ்ட வகுப்பைச் சேர்ந்த 125 மாணவர்களுக்கான கல்விக் கொடையாக 2 லட்சத்து 50ஆயிரம் ரூபா வலயக் கல்விப்பணிப்பாளர் ப. விக்னேஸ்வரனிடமும்-

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரி விற்கு அறக்கொடையாக 50ஆயிரம் ரூபா வைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி செல்வி எஸ்.சிவராணியிடமும்-

யாழ்.போதனா வைத்தியசாலையின் இருதய நோய்ப்பிரிவுக்கு அறக்கொடையாக ஒரு லட்சத்து 50ஆயிரம் ரூபா வைத்தியசாலையைச் சேர்ந்த வைத்திய கலாநிதி த.பேரானந்தராசாவிடமும்-வழங்கப்படவுள்ளன. (202)

# நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜன.5

கொக்குவில் லயன்ஸ் கழகத்தினரால் நடத்தப்பட்ட நயினாதீவு மக்களுக்கான சேவைத்திட்டங்களின் விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நயினாதீவு வீரபத்திரர் சுவாமி ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக டாக்டர் கே.ரி.சிவபாதம் தம்பதியர் கலந்துகொள்வர்.

கொக்குவில் லயன்ஸ் கழகத்துக்கான உப செயலக கட்டடத்திற்கான அடிக்கல் நடும்விழா, வீட்டுத்தோட்டம், விவசாய ஊக்குவிப்பு, புலமைப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான பாராட்டுவிழா, முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கௌரவிப்பு, மரநடுகை, சத்துணவு வழங்கல் ஆகிய திட்டங்கள் செயற்படுத்தப்படவுள்ளன. (202)

* * *

யாழ்ப்பாணம்,ஜன.5

நீர்வேலி கந்தசுவாமி கோயிலில் நாட்டில்அமைதியும்சமாதானமும்வேண்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பகல் திருவாசக முற்றோதல் இடம்பெறும். (202)

* * *

நவாலி,ஜன.5

தொல்புரம் மேற்கு ஜெகசோதி அம்மன் ஆலயத்தில் இன்று காலை 7.00 மணிமுதல் திருவாசக முற்றோதல் இடம்பெறும். (202-100)

## நாளை

| | |
|---|---|
| மார்கழி - 21 | ஞாயிற்றுக்கிழமை 06.01.2008 |
| நட்சத்திரம் : | கேட்டை முன்னிரவு : 08.37 |
| திதி : திரயோதசி | பி.ப : 03.28 வரை |
| சுபநேரம் | : 09.31-11.01 |
| ராகுகாலம் | : 05.01-06.31 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிய கல்வி நிறுவக டிப்ளோமா மாணவர்களுக்கு

யாழ்ப்பாணம், ஜன.5

தேசிய கல்வி நிறுவகத்தின் கல்வி டிப்ளோமா இரண்டாம் வருட பரீட்சை எதிர்வரும் 26 ஆம், 27ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

முதலாம் வருட மாணவர்களுக்கான பயிற்சிச் செயலமர்வு எதிர்வரும் 19ஆம், 20ஆம் திகதிகளில் நடைபெறும் என இணைப்பாளர் திருமதி இ.வில்வநாதன் தெரிவித்தார். (202)

## நிவாரணம் விநியோகம்

வலி தென் மேற்கு, ஜன.5

பண்டத்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் இடம்பெயர்ந்தோருக்கான மார்கழி மாதத்திற்கான உலர் உணவு நிவாரணத்தை சங்கக் கிளைகள் ஊடாக கடந்த 2ஆம் திகதி முதல் வழங்கி வருகின்றது (202-135)

## மரத்திலிருந்து தவறி வீழ்ந்து மாணவன் காயம்

யாழ்ப்பாணம், ஜன.5

மரத்தில் ஏறிய பாடசாலை மாணவன் தவறி வீழ்ந்ததில் இரு கைகளும் முறிந்தன.

இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக் கிழமை மாலை மீசாலை வடக்கு, வேம்பிராயில் இடம்பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த தமிழ்ச்செல்வன் சுபாஜெயனன் (வயது 11) என்னும் மாணவனே காயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப் பட்டார்

(202-207)

## பண்டத்தரிப்பு வைத்தியசாலையில் நீரிழிவு நோய்க்குச் சிகிச்சை

வலி தென் மேற்கு, ஜன.5

பண்டத்தரிப்பு ஆயுள் வேத வைத்தியசாலையில் நீரிழிவு நோய்க்கான சிகிச்சை ஒவ்வொரு புதன் கிழமையிலும் நடைபெற்று வருகின்றது.

நோயாளர்களுக்கு இரத்தப் பரிசோதனை மற்றும் சிறுநீர்ப் பரிசோதனை ஆகியனவும் புதன்கிழமைகளில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இதேவேளை - கொழும்பிலுள்ள ஆயுள்வேதத் திணைக்களத்தினால் இவ்வைத்தியசாலைக்கான மருந்து வகைகள் கடந்த வாரம் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும் அதன் விளைவாக இவ்வைத்தியசாலையில் நிலவி வந்த மருந்துத் தட்டுப்பாடு நீங்கியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (202-135)

## கூட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜன.5

யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தில் இதழியல் டிப்ளோமா முதலாம் அணியில் பகுதிநேரக் கற்கை நெறியைப்பயின்ற அனைத்து மாணவர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது. (202-115)

* * *

தென்மராட்சி, ஜன.5

தென்மராட்சி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இடம்பெறும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (202)

* * *

யாழ்ப்பாணம், ஜன.05

கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் செவ்வாய்க் கிழமை காலை 9.30 மணிக்குப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் ஏ.மோகன்ராஜ் தலைமையில் இடம்பெறவுள்ளது. (202-206)

* * *

யாழ்ப்பாணம், ஜன.5

ஆங்கில டிப்ளோமா ஆசிரியர் சங்கத்தின் கூட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். சன்மார்க்க மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

குழுப்படப்பிடிப்புத் தொடர்பாக நடைபெறவுள்ள கலந்துரையாடலில் சம்பந்தப்பட்டவர்களைக் கலந்து கொள்ளுமாறு சங்கத்தின் தலைவர் பி.என். சுதர்சன் கேட்டுள்ளார். (202)

**Jaffna College Institute of Technology**
Vaddukoddai, Jaffna, SriLanka

G.C.E (O/L), A/L வரை படித்த மாணவர்களுக்கு உகந்த பாடநெறி

**Certificate in Electrical & Electronics**
(மின் இலத்திரனியல் சான்றிதழ் பாடநெறி)
*(Duration : 6 Months)*

**Medium: English** *(தமிழ்மொழி மூல விளக்கங்களுடன் கூடியது)*

இருபாலரும் விண்ணப்பிக்கலாம் தொழில்நுட்பவியலாளர்களாக பணியாற்றவும் இத்துறையில் அறிவை பெற்றுக் கொள்ள விரும்புவோருக்கும் உகந்த பாடநெறி.

விண்ணப்பபடிவங்களை காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.


ஆரம்பம் : 16th January 2008

தொடர்புகளுக்கு:

Director,
Jaffna College Institute of Technology,
Vaddukoddai.

T.Phone : 0602213139/0212228275
E-Mail : jcit@sltnet.lk (சி/55021)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்
**கந்தையா கணபதிப்பிள்ளை**

தோற்றம் 25 12 1922
மறைவு 07 12 2007
திதி: துவாதசி

*அன்போடும் பாசத்தோடும் எம்மை வளர்த்தீர் ஐயா!*
*ஆர்வமுடன் எம்மை படிக்க வைத்தீர் ஐயா!*
*இல்லறத்தில் ஈடுபடுத்தி எதிர்காலம் மிளிரவைத்தீர் ஐயா!*
*ஈகைக் குணத்தால் எம்மை ஆட்கொண்டீர் ஐயா!*
*உவகையுடன் என்றும் தோன்றுவீர் ஐயா!*
*ஊக்கமுடன் என்றும் தொழில் செய்வீர் ஐயா!*
*எண்ணத்திலும் சீற்றம் கொள்ளீர் ஐயா!*
*இறுதிவரை வாய்க்கால் தரவையானை தரிசனம் செய்தீர் ஐயா!*
*இன்று அவன் கழல்களே சரணம் ஆகிவிட்டீர் ஐயா!*
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இன்று (05.01.2008) எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நீர்வேலி வடக்கு, நீர்வேலி. (69750) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### *இரத்தினசிங்கம் புஸ்பராணி (இராசாத்தி)*

ஊர்காவற்றுறை, கரம்பொன்னைப் பிறப்பிடமாகவும் புத்தூர் கிழக்கை வதிவிடமாகவும் தற்போது கனடா ஒட்டாவாவில் வசித்து வந்தவருமான இரத்தினசிங்கம் புஸ்பராணி 03.01.2008 வியாழக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசதுரை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - செல்லம்மா தம்பதியரின் மருமகளும் இரத்தினசிங்கம் (ஓய்வுபெற்ற பிரதம லிகிதர், நில அளவை திணைக்களம், யாழ்ப்பாணம்) அவர்களின் பாசமிகு மனைவியும் Dr.ரஞ்சித்குமார் ( கனடா), சதீஸ்குமார் (பொறியியலாளர் - கனடா), சோபனா (கனடா), தர்சனா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும் சுரேந்திரகுமார் (கனடா) அவர்களின் மாமியும் கிஷோரி (கனடா)யின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.01.2008) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புத்தூர் கிழக்கு,
புத்தூர்.
(69732)

தகவல்: -
செல்லத்துரை அன்னம்மா, நர்மதா இராமணி, சின்னமணி *(சகோதரர்கள்)*.

### *சத்தியதேவி சபாநாதன்*

உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் அராலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த சத்தியதேவி சபாநாதன் 04.01.2008 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா றொபேட் நவரத்தினம் - அன்னம்மா தம்பதியரின் மகளும் துரையப்பா - செல்லம்மா தம்பதியரின் மருமகளும் துரையப்பா சபாநாதனின் அன்பு மனைவியும் ஷிராணி, நிரோஷி ஆகியோரின் பாசமிகு தாயும் கிரிதரன், தீபன்பாபு ஆகியோரின் அன்பு மாமியும் திலக்ஷனின் பேர்த்தியும் சத்தியமூர்த்தி, சாந்ததேவி, தியாகுமூர்த்தி, காலஞ்சென்ற கருணாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான நல்லையா, புனிதவதி மற்றும் வைத்தியநாதன், பகவதி, சத்தியநாதன், துரைசிங்கம், நவீனராணி ஆகியோரின் மைத்துனியும் நோவா, செல்வன், செல்வி, சிறோமி, சோபனா, தர்சன் ஆகியோரின் பெரியதாயும் சுதன், பிரியா, லோஜி, நிருபா, நவஜன் ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.01.2008) சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு அராலியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அராலி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாகேந்திரமடம்,
அராலி வடக்கு, வட்டுக்கோட்டை (69746)

தகவல்:
T.சபாநாதன் *(கணவர்)*.

## கண்ணீர் அஞ்சலி

*எமது கல்லூரி பழைய மாணவனும் முன்னாள் ஆசிரியராகவும் அதிபராகவும் கடமையாற்றியவருமான*


**செல்வச்சிவம் யோகச்சந்திரன்**



*அவர்கள் 2007.12.30 அன்று இறைபதமடைந்ததையிட்டு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.*

அதிபர், ஆசிரியர்கள்,
ஊழியர்கள், மாணவர்கள்
யா/சிதம்பராக் கல்லூரி, வல்வெட்டித்துறை.

## கண்ணீர் அஞ்சலி



இந்து கலாசார முன்னாள் அமைச்சரும் கொழும்பு நாடாளுமன்ற உறுப்பினருமான

**தியாகராசா மகேஸ்வரன்**

அவர்களின் திடீர் மறைவினால் அதிர்ச்சியும் கவலையும் அடைவதுடன் அவரது பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எங்களது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரது ஆத்மாசாந்தியடைய மணற்காடு முத்துமாரி அம்பாளை பிரார்த்திக்கின்றோம்.

3ஆம் திருவிழா பரம்பரை உபயகாரர்கள்
மணற்காடு முத்துமாரி
அம்பாள் ஆலயம், காரைநகர்.

### சைக்கிள்கள் திருட்டு

தென்மராட்சி பிரதேச செயலக வளாகத்தில் விடப்பட்ட நான்கு சைக்கிள்கள் திருட்டுப் போயுள்ளன.

பிரதேச செயலக உத்தியோகத்தர் மூவரினதும் பொதுமகன் ஒருவரினதும் மிதிவண்டிகளே திருட்டுப் போயுள்ளன.

திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

### சிகிச்சா சேவை

பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் பிரதி புதன்கிழமைகளில் சிகிச்சா சேவையும் பிரதி சனிக்கிழமைகளில் விடுதி நோயாளர்கள் பார்வையிடுதலும் வைத்திய நிபுணர் ஒருவரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

யாழ்.போதனா வைத்தியசாலை பொதுவைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி எஸ்.கேதீஸ்வரனால் வழங்கப்படும் இச்சேவைகளை பொதுமக்கள் பெற்றுக்கொள்ளமுடியுமென யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி [illegible] அறிவித்துள்ளார். (2)


**UNIVERSITY OF JAFFNA, SRILANKA**

**VACANCIES - FACULTY OF ARTS**

University of Jaffna will entertain applications from suitably qualified persons for the under mentioned posts up to 19.01.2008

**Assistant Lecturer (on contract)** in
Art & Design/ Anthropology/ Archeology/ Carnatic Music (Vocal)/ Christian Civilization/ Dance (Bharathanatiyam)/ Drama & Theatre Arts/ Economics/ Education (Socail Science/Applied Science)/ English Literature/ Fine Arts (Art History)/ Hindu Civilization/ Hindu Philosophy/ Home Economics/ Law/ Linguistics/ Museum Studies/ Planning/ Philosophy/ Psychology/ Political Science/ Sociology/ Sanskrit/ Tamil.

**Tutor (On Contract)** in
Geography/ History

**Instructor (On Contract)** in
Art & Design/ Carnatic Music (Vocal/ Pannisai/ Veena/ Violin/ Mirudangam)/ Dance (Bharathanatiyam)

**Visiting Lecturer** in
Drama & Theatre Arts/ Home Economics/ English Literature/ Law **(English Medium)**/ Educacation/ Music (Pannisai)

**Note:** Candidates who are awaiting the result of the final degree examination may also apply for the post of instructor (on contract)/ Tutor (on contract)

| Post | Salary |
|---|---|
| Assistant Lecturer | Rs.25,145/-per month fixed |
| Tutor/ Instructor | Rs.20,755/-per month fixed |
| Visiting Lecturer | Rs.500/-per hour |

Other allowances approved by University Grants Commission will also be paid.

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar/ Establishments. University of Jaffna, Sri Lanka, either on person or by post, on a payment of Rs.100/- per form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/ Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with with a **self - addressed stamped envelope** 23x10 c.m. in size.


Those who wish to apply **for more than one post** should make **separate applications.**

Applicants from the University system/ Government Departments/ Corporations and Statutory Board should channel applications through the Heads of respective Institutions. Applications received after the closing date will be rejected without intimation. Only the sorted list of candidates will be called for the interview.

Registrar.
2008.01.02 (C/55028)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 13 02 1979
மறைவு 05 01 2007



செல்வன் **நவரெட்ணம் மனோராஜ்**

**பாசத்தைக் காட்டிய உள்ளங்கள்**
**உன்னைக் காணாது வாட**
**பரிதவித்துப் போன நெஞ்சங்கள்**
**உன்னைத் தேட**
**மாறாத சோகத்தை எமக்குத் தந்து**
**மறைந்துபோன எங்கள் ராயூவே/ ராஜ்**
**நீ இல்லாத வீடு வெறிச்சோடியது**
**நீ இல்லாது சொந்தங்கள் சிதறிப்போனது**
**எம் சின்னவனே**
**உன்னை நேசித்த சொந்தங்கள் வாடுதய்யா**
**உன்னை நேசித்த நெஞ்சங்கள் - இன்னும்**
**உன்னைத் தேடுதய்யா**
**பாசத்தை எல்லோருக்கும் காட்டியவனே!**
**பகலவனைப் போல் நீயும்**
**மறைந்து போனாயோ எங்கள் தம்பி**
**நீயும் திரும்பி வரமாட்டாயா எங்களைத் தேடி.**

(69738)

*சங்கரப்பிள்ளை வீதி,*
*ஆனைக்கோட்டை, மானிப்பாய்.*

உனக்காகக் காத்திருக்கும் சொந்தங்கள்:
பெற்றோர், சகோதரர்கள், நேசத்திற்குரியவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்குவேலியில் மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம் லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் இலவச மருத்துவ முகாம் நாளை சங்குவேலி தெற்கு மானிப்பாயில் உள்ள 'சஜி மெடிக்கல் கிளினிக்' நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

பொது மருத்துவம் கண் பரிசோதனை என்பன இடம்பெறும்

## மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்



**உயர்திரு வே.தி. செல்வரத்தினம்**
B.A, Dip.in Edu,SLES - II
(யாழ்.மாவட்ட மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளரும் யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளரும்)

எமது கல்வி வலயத்தின் கல்விப்பணிப்பாளர் உயர்திரு வே.தி.செல்வரத்தினம் அவர்கள் 05.01.2008 அன்று அகவை அறுபதைப் பூர்த்தி செய்து மணிவிழாக் காண்பதையிட்டு பெருமகிழ்வு அடைந்து மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

யா/ பத்தைமேனி இரத்தினேஸ்வரி வித்தியாலயம்,
அச்சுவேலி.

அதிபர்,
ஆசிரியர் கழகம்.

## மணி விழா நாயகனை மனமார வாழ்த்துகின்றோம்



உயர்திரு
**வே.தி.செல்வரத்தினம்**
B.A.Dip - in Edu, SLEAS II
(யாழ்.மாவட்ட மேலதிகக் கல்விப் பணிப்பாளரும் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளரும்)

அகவை அறுபதில் மணிவிழாக் காணும் அறிவுக் கடலான கல்விப் பணிப்பாளர் அவர்களை பரமன் அருள் பெற்று பல்லாண்டு வாழ எம் நெஞ்சார வாழ்த்துகின்றோம்

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்**
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.
யா/சென்.யேம்ஸ் மகளிர் பாடசாலை.

## மணிவிழா நாயகனே வாழி!



யாழ். மாவட்ட கல்விப் பணிப்பாளரும்
யாழ். மாவட்ட மேலதிக கல்விப் பணிப்பாளருமாகிய
உயர்திரு
**வே. தி.செல்வரத்தினம்**
(B.A.,DipEd,SLEAS)

*மணிவிழா காணும் நாயகன்*
*மக்கள் இடர்ப்பட்ட வேளையிலும்*
*மாசற்ற கல்விக்காய் உழைத்து வரும்*
*-எங்கள்*
*மாண்புறு கல்விப் பணிப்பாளரே*
*- பல்லாண்டு வாழி!*

யா/ கொக்குவில் இந்துக்கல்லூரி,
கொக்குவில்.

**அதிபர், ஆசிரியர்கள்,பாடசாலை அபிவிருத்திச்சங்கம், பழைய மாணவர்கள்.**

## இன்று
## நூல் வெளியீட்டு விழா

**சித்திரிப்பு எழுத்துக்கள் ஓர் அறிமுகம்**
**நூலாசிரியர் அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை**

இடம் : பாதுகாவலன் மண்டபம்
காலம் : 05.01.2008 சனிக்கிழமை
நேரம் : காலை 9.30 மணி

இறைவணக்கம்-திருமதி கொன்செப்ரா குணேந்திரன்

வரவேற்புரை: நீ. அன்ரனி

தலைமை அருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார்
(யாழ் மறைமாவட்டக் குருமுதல்வர்)

வாழ்த்துரை செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன்
பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா

நூல் நயப்புரைகள் திரு. ம. ஜனகேஸ்வரன்
திரு. ந. விஜயசுந்தரம்

கௌரவ விருந்தினர்
வாழ்நாள் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை

பிரதம விருந்தினர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை
(யாழ் ஆயர்)

நூல் ஆய்வுரை
தகைசார் வாழ்நாள் பேராசிரியர் அ. சண்முகதாஸ

நன்றியுரை-ம.பிரான்சிஸ்க

ஊடகவியலாளர்கள், துறைசார் மாணவர்கள், ஆவலர்கள், நண்பர்கள்
மற்றும் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

**UNIVERSITY OF JAFFNA,SRI LANKA**
**FACULTY OF MEDICINE**

*Academic Programme- Allied Health Sciences*

*The Academic programme of the New Batch (2006/2007) will Commence on 21st January 2008.*

*Registrar*
*2008.01.04*

(C 55655)

# விளையாட்டு நிகழ்வுகள்

வலி.வடக்கு.ஜன.05

உழவர் திருநாளையொட்டி அராலி தெற்கு மாவத்தை விளையாட்டுக் கழகம் வலிகாமம், யாழ்.உதைப்பந்தாட்ட லீக்குகளின் அனுசரணையுடன் நடத்திவரும் 11 பேர் பங்குபற்றும் உதைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் இன்று மாவத்தை விளையாட்டுக் கழக மைதானத்தில் பி.ப 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டங்களில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-

* யாழ்ப்பாணம் பல்கலைக்கழக உடற்கல்வி அணி எதிர் அராலி ஏ.எல் வி.க.
* அராலி துணைவி சென்ஸ்ரார் வி.க. எதிர் அராலி அண்ணா வி.க.

* * *

வலி.வடக்கு.ஜன.05

வலிகாமம் உதைப்பந்தாட்ட லீக் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடத்திவரும் 5 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பி.ப 3 மணிக்கு அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் கலந்துகொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு.

* புன்னாலைக்கட்டுவன் கலைமகள் வி.க'ஏ' அணி எதிர் தெல்லிப்பழை நாமகள் வி.க அணி
* தெல்லிப்பழை யுத் யூனியன் வி.க எதிர் ஆனைக் கோட்டை சாவற்காடு மகாத்மா வி.க
* அராலி ஐக்கிய வி.க எதிர் அராலி சில்வஸ்ரார் வி.க

(1-86)

# மாணவர்களுக்கு உணவு விநியோகத்துக்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜன.05

உலக உணவுத் திட்டத்தின் கல்விக்கான உணவு வழங்கும் செயற்திட்டத்தின் கீழ் பாடசாலைகளுக்கு 1ஆம் தவணைக்கு உணவுப் பொருள்கள் செயலகத்தால் வழங்கப்படவுள்ளன.

இந்த உணவுப் பொருள்களுக்கான வழங்கற் கட்டளைகளை இன்று மு.ப 10 மணிக்கு செயலக புனர்வாழ்வுப் பிரிவில் பெற்று, பொருள்களை எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் விநியோகிக்க வேண்டும் என்றும் பலநோக்கு சங்கங்களை திட்டப்பணிப்பாளர் ம.பிரதீபன் கேட்டுள்ளார்.

ஐந்து வலயங்களிலும் உள்ள பாடசாலைகளில் தரம் 1முதல் தரம் 9 வரையான வகுப்பு மாணவர்களுக்கு இத் திட்டத்தின் கீழ் உணவு வழங்கப்படுகின்றது. (1)

# நயினையில் இன்று திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம்,ஜன.5

நயினாதீவு பகவான் ஸ்ரீசத்திய சாயி பாபா நிலையத்தின் ஏற்பாட்டில் திருவாசக முற்றோதல் இன்று சனிக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை நயினை நாகபூஷணி அம்பாள் ஆலய அறுபத்தி மூன்று நாயன்மார் மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இந்த நிலையத்தின் ஏற்பாட்டில் வருடாந்தம் புதுவருடத்தை ஒட்டி திருவாசக முற்றோதல் நடத்தப்பட்டு வருகின்றது.(அ-1)

# குளத்தில் மூழ்கி சிறுவன் மரணம்

யாழ்ப்பாணம், ஜன.05

குளத்தில் குளிக்கச் சென்ற சிறுவன் நீரில் மூழ்கி மரணமானார்.

இப் பரிதாபச் சம்பவம் நேற்றுமுன்தினம் அல்லாரை வடக்கில் இடம்பெற்றது.

அல்லாரை வடக்கைச் சேர்ந்த ரவிச்சந்திரன் நிஷாந்தன் (வயது 6) என்ற சிறுவனே மரணமானவராவார்.

தனது உறவினர்களுடன் அல்லாரை வண்ணாங்குளத்தில் குளிக்கச் சென்ற சிறுவன் திடீரென குளத்தின் நீரில் அமிழ்ந்து உயிரிழந்தான்.

விசாரணையின் பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (1-231)

# மரண அறிவித்தல்

## அருள்திரு எஸ்.எவ். கிருபானந்தன் அடிகளார்

யாழ்.மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருள்திரு எஸ்.எவ் கிருபானந்தன் அடிகளார் நேற்று (04.01.2008) வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

இவரது நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*தகவல்:*
அருள்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம்
(யாழ்.மறைமாவட்ட குருமுதல்வர்)

ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்.

# மரண அறிவித்தல்கள்

## நாராயணசாமி தில்லைநாதன்(ரவி)

(யாழ். வல்வெட்டித்துறை ரான்ஸ்போர் உரிமையாளர்)



வல்வெட்டித்துறையைச் சேர்ந்த நாராயணசாமி தில்லைநாதன் அவர்கள் 02.01.2008 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாராயணசாமி-பவாமலர் தம்பதியினரின் மூத்த புதல்வரும் காலஞ்சென்ற நகேஸ்வரன் (இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்) மற்றும் இராசலெட்சுமி தம்பதியினரின் மருமகனும் யோகமலரின் அன்புக் கணவரும் அஞ்சனா, வராகன், தனுஜா ஆகியோரின் தகப்பனாரும், சிவராமின் மாமனாரும், நடராசா(சுந்தர்), உருத்திரராசா(ராயு), பாலேந்திரன் (செல்வம்), ஆதிசிவன்(கண்ணன்), கௌரி, ஜெயலெட்சுமி, சதீஸ்கண்ணன் (சதீஸ்), கெஜலெட்சுமி, பாலமுருகன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.01.2008) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஊறணி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நெடியகாடு
வல்வெட்டித்துறை.

(69757)

தகவல்:
குடும்பத்தினர்.

## சின்னையா சிவசிதம்பரநாதன்



செட்டிக்குறிச்சி, பண்டத்தரிப்பை பிறப்பிடமாகவும் இந்துக்கல்லூரி வீதி, பண்டத்தரிப்பை வதிவிடமாகவும் கொண்ட சின்னையா சிவசிதம்பரநாதன் 03.01.2008 வியாழக்கிழமை மாலை 4.30 மணியளவில் இறைபதம் எய்தினார்.

அன்னார் செட்டிக் குறிச்சியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சின்னையா-இராசம்மா ஆகியோரின் மகனும் மயிலிட்டி தெற்கு கட்டுவனைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான பண்டிதர் நமசிவாயம்-கமலாம்பிகை ஆகியோரின் மருமகனும் தவமணிதேவியின் கணவரும், விமலா, சசி ஆகியோரின் தகப்பனாரும் காலஞ்சென்ற பவளம்மா மற்றும் மணிமேகலாதேவி, இராஜேஸ்வரி ஆகியோரின் சகோதரனும் தர்மாம்பிகை, ஞானம்பிகை, புனிதவதி, பாலச்சந்திரன், கிருபாகரன், காலஞ்சென்ற இராமச்சந்திரன், கௌரிதேவி, ஞானாகரன்,ஸ்ரீகாந்தன், உமாகாந்தன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.01.2008) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இடம் பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சம்பில்துறை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்துக்கல்லூரி வீதி,
பண்டத்தரிப்பு.

(55044)

தகவல்
ந. பாலச்சந்திரன்
மைத்துனர்.

## செல்வன் சந்திரகுமார் மகிந்தன்



அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கோண்ட சந்திரகுமார் மகிந்தன் 01.01.2008 செவ்வாய்க்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற சந்திரகுமார் (பாதுகாப்பு ஊழியர், யா.ம.ச)-விஜயவதனி தம்பதியினரின் சிரேஷ்டபுத்திரனும், கிசாந்தினி (நுண்கலைப் பீடம்), பார்த்தீபன், மிறோயன் ஆகியோரின் அன்புச்சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.01.2008) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பகல்12 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*அரியாலை,*
*யாழ்பாணம்.*

தகவல்:
குடும்பத்தினர்,
பெரியதந்தை சந்திரன், மல்லிகா,பெரியம்மா.
ரஞ்சினி (லண்டன்).

## சிவராஜா பஞ்சலிங்கம்

புதிய செம்மணி வீதி, கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட சிவராஜா பஞ்சலிங்கம் அவர்கள் நேற்று (04.01.2008) வெள்ளிக்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் மனோறஞ்சிதம் அவர்களின் கணவரும், ஆதவன், கஜன், ஆரணி ஆகியோரின் தந்தையும், காந்திமலர், இன்பமலர், சோதிமலர், காலஞ்சென்ற விசாகமூர்த்தி மற்றும் தஞ்சனமூர்த்தி, சதீஸ்குமார் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்ஸ்சில் நடைபெறும். கேண்டாவிலில் துக்கம் அனுஸ்டிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*கோண்டாவில் மேற்கு,*
*கோண்டாவில்.*

*தகவல்:*
K.குகநாதன்

## செல்வி சுகந்தி சுந்தரலிங்கம்

சாவகச்சேரி,கண்டிவீதி,ஆஸ்பத்திரி முன்பாக பிறப்பிட மாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்வி சுகந்தி சுந்தரலிங்கம் நேற்று (04.01.2008)காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுந்தரலிங்கம் (இளைப்பாறிய ஆசிரியர்)-யோகேஸ்வரி (இளைப்பாறிய ஆசிரியர்) தம்பதியினரின் மகளும்,நந்தகுமார்(பிரத்தியேகஆசிரியர்), உதயகுமார்(கனடா), சுந்தரகுமார்(பிரதம பொறியியலாளர், கட்டடத்திணைக்களம் வவுனியா),மாலதி(கனடா),ஆகியோரின் சகோதரியும் நவரஞ்சிதமலர், சறோயினி(கனடா), இந்திரகுமாரி,நரேந்திரன்(கனடா), ஆகியோரின் மைத்துனியும், சஞ்சயன்,கேகயன், கீர்த்தனா, தீபனா, காங்கேயன், யேதாகி, பிருதுவி ஆகியோரின் மாமியாரும் சரண்யா,ஜெகாந்தன் ஆகியோரின் சித்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.01.2008) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக அல்லாரை கொற்புலவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*ஆஸ்பத்திரி முன்பாக,*
*கண்டிவீதி, சாவகச்சேரி.*

தகவல்:
யோகேஸ்வரி சுந்தரலிங்கம்
(தாய்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயணிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பல் நிறுவனம் அறிவித்துள்ளதாக அரச அதிபர் கூறினார். சேவையில் ஈடுபடும் கப்பலின் வழமை யான பராமரிப்பு வேலைகளுக்காக இச் சேவை இடை நிறுத்தப்பட்டதாகக் கப்பல் நிறுவனம் அறிவித்துள்ளது.

## கணிதம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உடன் அனுப்பப்பட்டன.

அவற்றை பாடசாலை அதிபர்கள் இன்று பெற்றுக் கொள்ளலாம் என்று யாழ். கல்வித்தி ணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நேற்று வெளியான முடிவுகளின் பிரகாரம் மாவட்டத்தின் முதலிடம், இரண்டாம் இடம் பெற்ற மாணவர்களின் விவரங்கள் வருமாறு:-

**கணிதம்**

* விமலநாதன் ரஜீவன்-பருத்தித் துறை ஹாட்லிக் கல்லூரி (மாவட்டம்-1,தேசியமட்டம்-3)
* இராமகிருஸ்ணன் ஜெயந்தன்- உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலை.(மாவட்டம்-2, தேசியமட்டம்-5)

**உயிரியல்**

* ஸ்ரீசோதிநாதன் நிமலன்- பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி (மாவட்டம்-1,தேசியமட்டம்-42)
* சசிகலா சிற்றம்பலம்-வேம்படி மகளிர் கல்லூரி (மாவட்டம்-2, தேசியமட்டம்-49)

**கலை**

* கமலச்சந்திரன் கீர்த்தனா- தெல்லிப்பழை யூனியன் கல்லூரி (மாவட்டம்-1, தேசியமட்டம்-105)
* நவநாதன் தாட்சாமினி- சுண்டுக்குழி மகளிர் கல்லூரி (மாவட்டம்-2,தேசியமட்டம்-172)
* சரண்ஜா ஜோசப்குமார்- யாழ்.இந்து மகளிர் கல்லூரி (மாவட்டம் -3,தேசியமட்டம்-205)

**வர்த்தகம்**

* ரவிந்திரராஜா அனுசங்கர்- சென்.ஜோன்ஸ் கல்லூரி (மாவட்டம்-1, தேசியமட்டம்-343)
* விஜயரத்தினம் ஹனிதா-அளவெட்டி அருணோதயா (மாவட்டம்-2, தேசியமட்டம்-556)

நேற்று கிடைத்த முடிவுகளில் யாழ்பாணம் இந்துக்கல்லூரியின் விவரங்கள் வரவில்லை என்றும் கொழும்பில் தங்கியுள்ள அக்கல்லூரி யின் அதிபர் ஏற்கனவே அதனைப் பெற்றுள்ளதா கவும் கல்வித் திணைக்கள வட்டாரங்கள் மூலம் அறியவந்தது. (அ-1)

## இலங்கையின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய வெளிவிவகார அமைச்சின் செய்தித் தொடர்பாளர் நவ்விஸ்சர்னா இது குறித்து நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டி ருப்பதாவது-

இலங்கையில் இடம்பெற்றுவரும் வன் முறைகளையும் பொதுமக்கள் படும்வேதனை களையும்குறைப்பதற்கு எடுக்கப்படும் எந்தநட வடிக்கைகளையும் இந்தியா வரவேற்கிறது.

துரதிஷ்டவசமாக சமீபகாலமாக இலங்கை யில் வன்முறையும், மோதல்கள் மற்றும் பதற் றமும் அதிகரித்து வருகின்றன.

அதேநேரத்தில் ஒன்றுபட்ட இலங்கைக் குள் அனைத்து சமூகத்தினரும் ஏற்றுக்கொள் ளக்கூடிய அரசியல் தீர்வு ஒன்று காணப்பட வேண்டும் என்று இந்தியா விரும்புகிறது.

அத்தகைய தீர்வின்மூலம் தான் வன்முறை யால் பாதிக்கப்பட்ட அந்த நாட்டில் நிரந்தரத் தீர்வை ஏற்படுத்த முடியும்.

இலங்கைப் பிரச்சினைக்கு இராணுவ நடவடிக்கை தீர்வாக அமையாது - இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## போர்நிறுத்தம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்படவில்லை. மாறாக புலிகளே தம்மைப் பலப் படுத்திக் கொண்டனர். ஆரம்பம் முதலே இதில் உள்ள குறைபாடுகளை நாம் சுட்டிக்காட்டி வந் துள்ளோம். அதனை எவரும் பொருட்படுத்தவில்லை.

**வன் முறைகள் அதிகரித்தன**

போர்நிறுத்த உடன்படிக்கை வன்முறைகளை ஒழித்திருக்க வேண்டும். மாறாக வன்முறைகள் அதிகரித்துள்ளன.

மஹிந்த ராஜபக்ஷ நாட்டின் தலைமைப் பொறுப்பை ஏற்று மூன்று வாரங்களில் புலிகள் தமது வன்முறைகளை அதிகரித்துவிட்டனர். என்றாலும் ஜனாதிபதி அரசியல் தீர்வு ஒன்றைக் காணும் நிலைப் பாட்டில் இருந்து விலகிச் சென்றுவிடவில்லை.

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தின்படியும், இலங்கை-இந்திய உடன்படிக்கையின் அடிப்படையி லும் அனைத்து சமூகத்தவர்களும் ஏற்றுக் கொள்ளும் தீர்வு ஒன்றை அரசு முன்வைக்கும்.

**நோர்வேயின் பங்கு தொடரும்**

போர் நிறுத்த உடன்படிக்கையில் இருந்து இலங்கை அரசு விலகிக் கொள்வதை உடன்படிக் கையின் 4(4) பிரிவின்படி நோர்வே அரசுக்கு முறையாக அறிவித்துள்ளோம்.

போர் நிறுத்த ஒப்பந்தம் முடிவுக்கு வந்து, கண்காணிப்புக்குழு வெளியேறினாலும் நோர் வேயின் பங்கு பணி தொடரும். இப்போது சூழ்நிலை கள்மாறியுள்ளன. அதற்கேற்ப நோர்வேயின் பங் களிப்பும் மாறவேண்டியிருக்கும். அது எத்த கையதாக இருக்கும் என்பதை இலங்கை அரசு விரைவில் தீர்மானித்து வரையறை செய்யும் என்று அமைச்சர் மேலும் கூறினார்.

# முல்லைத்தீவில் விமானக் குண்டுவீச்சு

முல்லைத்தீவு அளம்பில் உடுப்புக்குளம் பகுதி மீது அரச விமானப்படை விமானங்கள் நேற்று நடத்திய குண்டுவீச்சில் ஏழு சிறுவர்கள் உட்பட பதின்மூன்று பொதுமக்கள் காயமடைந்திருக்கின்றனர்.

விமானப்படையின் மிக் மற்றும் கிபிர் விமானங்கள் மாலை சுமார் 4.30 மணியளவில் குண்டுவீச்சுகளை நடத்தின. இக் குண்டுகள் மக்கள் குடியிருப்புகள் மீது வீழ்ந்து வெடித்தன என்று தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்தவர்கள் முல்லைத்தீவு வைத்திய சாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருக் கின்றனர். இவர்களில் இருவரின் நிலை கவலைக் கிடமாகவுள்ளது என்று வைத்தியசாலை வட்டா ரங்கள் தெரிவித்தன. (சி)

## இந்தியப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ள பின்னணியில், இலங்கையின் சுதந்திர தின விழாவில் இந்தியப் பிரதமர் கலந்து கொள்ளக் கூடாது என்று கோரி தமிழகத்தில் உள்ள ஈழத் தமிழர் ஆதரவாளர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். புதுடில்லி அரசுக்குத் தலையிடி கொடுக்கும் வகையில் இந்தப் போராட்டங்களும் அதையொட்டிய உணர்வலைகளும் விரிவ டைந்து வருகின்றன.

இந்தச் சூழ்நிலையிலேயே இலங்கைக்கு இந்தியப் பிரதமர் விஜயம் செய்ய மாட்டார் என்ற உறுதிமொழி புதுடில்லியிலிருந்து அதிகார வட் டாரங்கள் மூலம் சென்னைக்குத் தெரியப்படுத்தப் பட்டிருப்பதாக சென்னையில் மிக நம்பகரமான வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

இது தொடர்பான புதுடில்லியின் முடிவு மிக விரைவில் கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் மூலம் கொழும்பு அரசுக்குத் தெரியப்படுத்தப் படும் என்ற தகவலும் சென்னைக்கு எட்டியுள்ளது.

ஆனால், இதுகுறித்து கொழும்பில் உள்ள இந் தியத் தூதரக வட்டாரங்கள் மூச்சுவிட மறுத்து விட்டன.

''இந்தியப் பிரதமர் கொழும்புக்கு விஜயம் செய்ய இருக்கின்றார் என்ற செய்தியையும் நாம் வெளியிடவில்லை. அவர் இங்கு வருவாரா அல் லது இல்லையா என்ற தகவலையும் எம்மால் கூற முடியாது. உத்தியோகபூர்வ அறிவுறுத்தல் ஏதும் புதுடில்லியிலிருந்து கிடைத்தால்தான் நாம் ஏதும் கூறமுடியும்.'' - என்று கொழும்பில் உள்ள இந் தியத் தூதரக வட்டாரங்கள் உதயனுக்குத் தெரி வித்தன. (சி)

## புலிகள் மீதான ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறினீர்கள். ஆனால், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ 2008ஆம் ஆண்டை யுத்த ஆண்டாகப் பிரகடனப்படுத் தியுள்ளார். இந்நி லையில், உங்களுடைய சமா தான முன்னெடுப் புகள் சாத்தியப்படுமோ? என்று வெளிவிவகார அமைச்சரிடம் செய்தி யாளர்களால் கேட்கப்பட் டது. இக்கேள் விக்குப் பதில் அளிக்கும்போதே மேற்கண்டவாறு அமைச்சர் கூறினார்.

பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜ பக்ஷ 2008 ஆம் வருடத்தை யுத்த ஆண் டாகப் பிரகட னப்படுத்தினாலும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சமாதான முன்னெடுப் புகளிலிருந்து விலகிச் செல்ல வில்லை. அரசியல் தீர்வு ஒன்றின் மூலம் நிரந்தர சமாதா னத்தை ஏற்படுத்தும் முயற்சிகளை அவர் கைவிட்டு விடவில்லை என்று அவர் தெரி வித்தார்.

## வெளியேறும் . ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை போர் நிறுத்த கண்காணிப்பு குழு கடு மையான குறைபாடுகளைக் கொண்டது. எனினும் பொதுமக்களுக்கு எதிரான துஷ்பிரயோகங்களைக் குறைப்பதற்கு கண்காணிப்பாளர்கள் உதவினர்-

ஐக்கிய நாடுகள் கண்காணிப்புக் குழுவிற்கான தேவை முன்னெப்போதையும் விட இப்போது மிக வும் அதிகமாகியுள்ளது- என்றும் பியர்ஸன் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

**மக்கள் நெருக்கடியில்**

தற்போதைய போர் நிறுத்தக் கண்காணிப் பாளர்கள் வெளியேறியதும் யுத்தத்தில் சிக்கி யுள்ள மக்கள் பாதுகாப்புத் தேடுவதில் நெருக் கடிகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என் றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்

## முகமாலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நகர்ந்து சென்று புலிகள் மீதும் அவர்களின் பதுங்கு குழிகள் மீதும் தாக்குதல் மேற் கொண்டு மீண்டும் தமது பழைய நிலைகளுக்கு திரும்பி னார். இராணுவம் முன் நகர்ந்து சென்று புலிகள் மீதும் இனம் காணப்பட்ட இலக்குகள் மீதும் தாக்குதல் மேற்கொண்டபோது இராணுவத்தி னருக்கு துணையாக பிரங்கி,பல்குழல் ரொக்கட் மற்றும் எறிகணைத்தாக்குதல்களும் மேற் கொள்ள பட்டன. சுமார் நான்கு மணித் தியாலங்கள் வரை நீடித்த இந்த மோதலில் எட்டு புலிகள் கொல்லப் பட்டும் 30 க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள் ளமை அவர்களின் தகவல் பரிமாற்றத்தின் போது ஊர்ஜிதமாகியது.

இந்த மோதலின் போது இராணுவத் தரப்பில் மூன்று வீரர்கள் கொல்லப்பட்ட துடன் 9 போர் காயமடைந்தனர். இராணுவத்தினர் தொடர்ச்சி யாக புலிகளின் முன்னரங்க பதுங்கு குழிகள் மீதும் முன்நகர்ந்து சென்று தாக்குதல் மேற் கொள் வதன் காரணமாக பெரும் எண்ணிக்கையிலான புலி அங்கத்தவர்கள் கொல்லப்பட்டும் படுகாயங் களுக்கும் உள்ளாகி அப்பிரதேசத்தில் இருந்து அப்புறப்படுத் தப்பட்டுள்ளனர்- என்று உள்ளது.


**கணக்கீடு A/L 2010**
ஆரம்பம் - 05.01.2008 சனி 3 மணி
ஆசிரியர்: N.சங்கர் B.Com., H.N.D.A
தேவி அச்சக ஒழுங்கை, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
*தனியாகவோ, குழுவாகவோ உங்கள் வீடுகளிலேயே கற்க விரும்புவோரும் தொடர்பு கொள்ளலாம்.
T.P. 021- 4591379

**S.L.A.S பரீட்சை**
இம்மாதம் நடைபெறவிருக்கும் (20ஆம் திகதி) இப்பரீட்சைக்கான வழிகாட்டல் வகுப்பு சனி, ஞாயிறு தினங்களில் யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப் படிப்புகள் பிரிவில் (யாழ்.போதனா வைத்தியசாலை முன்பாக) நடைபெறும்.
ஆரம்பம்: 5.1.2008 சனி காலை 10 மணி
★ இப்பரீட்சைக்கான தவகேசர் ஆசிரியரின் வழிகாட்டி நூல் வகுப்புக்களிலும், பூபாலசிங்கம், துர்க்கா, ஸ்ரீலங்கா, சிதம்பரப்பிள்ளை புத்தகசாலைகளிலும் கிடைக்கும்

**N.C.A. கல்வி நிலையம்**
கே.கே.எஸ். றோட், இணுவில்.
A/L 2010
கலை, வர்த்தக, கணித, விஞ்ஞானப் பிரிவுகள் ஆரம்பம்
05.01.2008 சனி 9மணி

| | |
|---|---|
| Eco - N.B.கஜீதரன் | Tam-P.மகாலிங்கம் |
| Acc - N.சதீஸ் | -P.பாலமுரளி |
| B.St - K.பாலசபேஸ் | H.C -M.மயூரன் |
| C.Mat - G.ஐங்கரன் | Log-K.பிரதீபன் |
| Phy - K.அனந்தகோபன் | Geo-S.மகிந்தன் |
| Che -S.தாஸ் | Drama-K.சுதா |
| Bio- பிரபல ஆசிரியர் | P.Sci-S.செந்தூரன் |

**யாழ் மாவட்டத்தின் திறமைவாய்ந்த முன்னணி ஆசிரியர்களின் சேவையுடன்**
A/L 2010 கலை, வர்த்தகப் பிரிவு

| | |
|---|---|
| Acc-திரு.P.பகீரதன் | Acc-திரு.N. உதயன் |
| Eco- திரு.G.பிரதீபன் | Geo-திரு.N.பாபு |
| B.St- திரு.K.முரளி | Drama-திரு.ரவி |
| Tam-திரு.N. சபேசன் | G.Eng- திரு.A.பாலா |

ஆரம்பம் 5.01.2008 சனி 3 pm
* அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
* தனிப்பாட அனுமதிகளும் வழங்கப்படும்.
IBS
கல்வி நிறுவனம், சுண்டிக்குளி

**கணக்கீடு**
P.பகீரதன்
A/L 2009
தொங்கல் கணக்கு
Sat / Sun 4-5
ஆரம்பம் 5.1.2008 சனி 4 Pm
IBS
கல்வி நிறுவனம், சுண்டிக்குளி.

**விக்னா**
கல்வி நிறுவனம்
தலைமையகம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்
A/L DAY CLASS
வர்த்தகப் பிரிவு
Eco-திரு.B.கஜீதரன் 7.15
Acc-திரு. P.பகீரதன் 8.50-11.00
Com-திரு. A.ஞானி 10.00-11.00
ஆரம்பம்:- 07.1.2008(Mon)

**நிரு ரியூசன் சென்ரர்**
கோண்டாவில்
A/L 2010
கலை, வர்த்தகப் பிரிவு ஆரம்பம்
06.01.2008 (ஞாயிறு, சனி)
2008ஆம் ஆண்டுக்கான பகல் நேர வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.

**BUSINESS ACADEMY**
566/1, K.K.S ROAD, JAFFNA
வர்த்தகப் பிரிவு ஆரம்பம்
A/L 2010
05.01.2008 சனி மாலை 3மணி
பொருளியல் - P.சண்
வணிகக்கல்வி - யசோ
கணக்கீடு - C.Rathan
பொருளியல் வினாவிடை 2008 A/L & Day Class வகுப்புக்கள் ஆரம்பம்
08.01.2008 செவ்வாய் பி.ப 3 மணி

**விக்னா**
கல்வி நிறுவனம்
தலைமையகம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்
A/L DAY CLASS
கலைப் பிரிவு
Eco-திரு.B கஜீதரன்-7.15
Log-திரு. கமல்-7.15
Tam-திரு.குழந்தை-8.30
H/c-திரு. N.Tதரன்-9.30
Geo-திரு.பாபு- 7.15
Hin-திரு.N.Tதரன்-10.15
Hist-திரு.பத்மன்
P/sci-திரு.றொபின்சன்-11.15
Chri-திரு.ஜெயமோகன்-9.30
Drama-திரு.மயூரன்-11.15
ஆரம்பம்:- 07.1.2008(Mon)

**BRAIN POWER INSTITUTE**
(சின்னக்கடை சந்தைக்கருகில்)
A/L DAY CLASS
ஆரம்பம்
07.01.2008 காலை 8மணி
2007 A/L பரீட்சையில் சிறந்த பெறுபேறு பெற்ற மாணவர் அனைவரையும் வாழ்த்துகின்றோம்

**விக்னா கல்வி நிறுவனம்**
தலைமையகம் 52, ஸ்ரான்லி வீதி.யாழ். சனிக்கிழமை 8மணி
ஜனவரி 5 ஆரம்பம்
கிளை நிறுவனம் 417, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். சனிக்கிழமை 7மணி
A/L 2010
கலை, வர்த்தக வகுப்புகள்

| | | |
|---|---|---|
| Eco-திரு.B.கஜீதரன் | Com-திரு.யசோ | Acc-திரு.P.பகீரதன் |
| Log- திரு.கமல் | Tam- திரு.குழந்தை | H/C-திரு.பத்மராஜா |
| Geo- திரு.பாபு | Hin-திரு.N.T.தரன் | Hist-திரு.பத்மன் |
| P/Sci-திரு.றொபின்சன் | Chri-திரு.ஜெயமோகன் | Drama-திரு.மயூரன் |

A/L 2008 Day Class கலை, வர்த்தக வகுப்புகள் ஆரம்பம் 07.01.2008 8மணி
தலைமையகம் 52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

**நியூ கேம்பிறிஜ் கல்வி நிலையம்** அளவெட்டி தெற்கு
A/L Day, 2010
கலைப்பிரிவு
ஆரம்பம் :- 10.01.2008 (வியாழன்)
நேரம் :- 9மணி
தமிழ்:- ஜெசிந்தன்
நாட:- மங்களேஸ்
இந்:- ரமணன்
அளவை:- பிரதீபன்
அரசி:- செந்தூரன்
புவி:- டினேஸ்
விவசா:- கஜேந்திரன்
அனுமதிகள் வழங்கப்படுகின்றன

**அஷ்மின் அக்கடமி**
இந்துக்கல்லூரி முன்பாக, சண்டிலிப்பாய்.
A/L Day, 2010
கலைப்பிரிவு
ஆரம்பம் :- 10.01.2008 (வியாழன்)
நேரம் :- 9மணி
நாட: கணேஸ்
தமி: ஜெசிந்தன்
இந்: ரமணன்
புவி: மனோகரன்
பொரு: பாபா
அரசி: செந்தூரன்
கிறிஸ்: யூட்
அளவை: பிரபல ஆசிரியர்
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டன.

**Decide Yourself Where You Buy**

| Mother Boards | |
|---|---|
| Intel Original 945GCNL | 10900/- |
| Intel Original 945GC | 10600/- |
| Asus Intel 945 1333Mhz | 9350/- |
| Asus MX-SE | 7900/- |
| Asus Intel P5P800 | 8500/- |
| AsRock P4i65 Socket 478 | 8900/- |
| Foxconn intel 945 | 8600/- |
| AsRock intel 945 | 8250/- |
| Raffels DDR2 AGP | 8250/- |
| MIPAQ Intel 845 Socket 478 | 7900/- |

| Processors | |
|---|---|
| Intel P4 3.0Ghz/2M HT Box | 8800/- |
| Intel Dual Core 3.0/4M Box | 13500/- |
| Intel Core 2 Duo 2.0 Ghz | 19500/- |
| Intel C2D 2.66/4Mb Ind share | 31500/- |
| Intel Celeron D 3.06/512K | 5950/- |

Rams
Kingston DDR1 256-2500/- 512-3750/-
Kingston DDR2 1Gb-3250/- 512Mb- 2250/-
SDRAM 128 1750/- 256-3250/-

| Hard Disks & Optical Drives | |
|---|---|
| Maxtor 80Gb Sata | 6350/- |
| Maxtor 160Gb Sata | 7450/- |
| External Enclosure USB | 4750/- |
| Hard disk Cooling Fan 1000/-, | 5000/- |
| Flash Kingston 1Gb-1650/- 2Gb | 2500/- |
| Samsung Combo | 3900/- |
| Samsung DVD-RW | 4900/- |
| External & Internal TvTuner | 4250/- |
| [illegible] | 5750/- |

Intel P4 3.0/2m, Intel Chipset Mb, 512mb DDR2, 80Gb Hdd, Combo, ATX Case, 15 Viewsonic CRT, Keyboard, Mouse,Speaker & UPS 58,000/-
Intel Dual Core 3.0/4m, Intel 945 Chip Mb, 1Gb DDR2, 160Gb Hdd, DVD-RW, ATX Case, 15 Viewsonic Keyboard, Mouse,Speaker & UPS 68,000/-
Flash Free
UNIT
347, K.K.S Road, Jaffna
0214590720,0773134737


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.01.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.